போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4642

திராவிடநாடு

மலர் 13 | 31–10–54 | இதழ் 18

காம்ரேட் கழுகாசலம்

"தெரிகிறது, தெரிகிறது, எங்கே நீண்ட நாட்களாகக் காணோம் என்று கேட்கிறீர்—உமது பார்வையின் பொருள் அதுதானே, பிரதர்" என்று பேச்சைத் துவக்கினார், காம்ரேட் கழுகாசலம்; அவர்தான் எதையும் பொதுவுடைமைக் கண்களோடு பார்க்கும் தத்துவமறியாதவன் நான் என்பதற்காக என்னைக் காம்ரேட் என்று அழைப்பதில்லையே! அதனால்தான் 'பிரதர்' போட்டார். நான் உண்மையில் காம்ரேட் இவ்வளவு நாட்களாக எங்கே போயிருந்தார் என்று அவரைக் கேட்கும் எண்ணம் கொண்டு அவரைப் பார்க்கவில்லை, அவருடைய கன்னத்தில் ஒரு சிறு தீப்புண் இருந்தது, அதைத்தான் கவனித்தேன். கேள்வி கேட்டு அவரே பதிலும் கூறலானார் "ஜில்லா போர்டு தேர்தலில் ஈடுபட்டிருந்தேன், அதனால்தான் கண்ணில் படவில்லை. ஏழாயிரத்து நானூற்றுப் பதினெட்டு மைல் சுற்றுப் பயணம், ஆயிரத்து அறுநூற்று நாற்பது நிமிடங்கள் பேசியிருக்கிறேன்" என்றார்; பலன் என்ன வென்று கூறவில்லை, அதுதான் பத்திரிகையில் வெளிவந்ததே! "கன்னத்தில் என்ன?" என்று கேட்டேன். "வலது கன்னத்திலா, இடது கன்னத்திலா?" என்று அவர் விளக்கம் கேட்டு, இரு கன்னங்களிலும் வடு இருப்பதைக் குறிப்பிட்டார். வலப்பக்கம் இருப்பது, வர்க்கப் போராட்டத்தின் விளைவு, இடது பக்கம் இருப்பது தீபாவளிக் கண்டனத்தின் விளைவு, என்றார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது; இவ்வளவு சர்வ சாதாரண விஷயத்திலே கூட அவர், 'கம்யூனிச பாஷை'யில் பேசுகிறாரே என்று.

"பிரதர்! இந்த ஜில்லாபோர்டு தேர்தல், வர்க்கப் போராட்டத்தின் ஒரு சிறு அம்சம்தானே. நில முதலைகள் ஒரு புறம், உழவர் படை மற்றோர்புறம், பணமூட்டைகள் ஒரு அணியில், கொள்கை உத்வேகம் இன்னோர் அணியில், கள்ள மார்க்கட் கழுகு ஒரு பக்கம், வட்டமிட்டது, அதைவீழ்த்தும் கவண் வீச்சுக்காரர் ஒரு புறம்......... என்று காம்ரேட் கழுகாசலம், மேடைப் பேச்சைத் துவக்கினார்; அவருடைய பசி அவ்வளவு, நான் என்னசெய்ய! கேட்டுக்கொண்டிருந்தேன். தேர்தல் கூட்டம் ஒன்றிலே, அவர் பேசும் போது, ஏற்பட்ட சிறு காயம் இது, என்று விளக்கம் தந்தார். கல்வீச்சோ! —என்று நான் கேட்டேன், பயந்த வண்ணம்; நான் எதிர்பார்த்தபடியே அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டுவந்துவிட்டது — பிரதர் என்னசொன்னீர்! என்ன சொன்னீர் டாலர் நடையிலே பேசுகிறீரே!! கல்வீச்சா—யார்மீது, அகில இந்திய முதலாளித்துவத்தை முறியடிக்க முரசுகொட்டி முழக்கமிட்டு வரும், எங்கள்மீதா கல்வீச்சு—தவறு நண்பரே! பெருந்தவறு! நாடு, எங்கள் பக்கம் திரண்டு நிற்கிறது — கல் வீசும் கபோதிகள் யாரும் இல்லை — காயம் அதனால் விளைந்ததல்ல—திண்டுக்கல் வட்டத்திலே, பேசிக்கொண்டிருக்கும் போது, ஆவேசமிகுதியால், மேஜை மீது இருந்த சோடாப்பாட்டிலை எடுத்துச் சாப்பிடப்போகும் போது, கை தவறி, கன்னத்தில் இடித்துவிட்டது-இரத்தம் கசிவதாகத் தலைவர் சொன்னார் —கூட்டத் தலைவர்— பாட்டாளி வர்க்கம் பச்சை இரத்தம் பரிமாறுவதைக் கவனியுங்கள், இந்தச் சில சொட்டுகளைப் பற்றிக் கவலைப்படாதீர், காம்ரேட்! என்று தலைவருக்கு ஒரு 'டோஸ்' கொடுத்தேன். சேவா சின்னம் பிரதர்! சேவா சின்னம் இது, என்று கூறியபடி, பெற்றெடுத்த குழந்தையின் கன்னத்தை அன்போடு தடவிக் கொடுப்பதைப் போலக் காம்ரேட் கழுகாசலம் தன் கன்னத்தைத் தடவிக் கொடுத்துக்கொண்டார்.

"இது?" — என்று கேட்டு மீண்டும் அவர் பேசச் சந்தர்ப்பமளித்தேன், களிப்புடன் துவக்கினார்,

"இது, தீபாவளிக் கண்டனத்தின் விளைவு"

"தீபாவளியைக் கண்டித்தீர்களா... அடடா! தெரியாமல் போய்விட்டதே ....அந்தப் பண்டிகையின் புரட்டு, அதற்கு ஆதரவாக உள்ள கதையிலே தொக்கிக்கிடக்கும் மூடத்தனம்..."

',இவைகளை எல்லாம் எடுத்துப் பேசி, தேசமகாஜனங்களின் நேரத்தை, வீணாக்கினேன் என்று கருதுகிறீர்களா? எனக்கேனய்யா, அந்த வீண்வேலை. அதற்கு நீங்கள் இருக்கிறீர்களே......"

"தீபாவளி கண்டனம், என்றீரே?"

"ஆமாம் — கண்டனம் — தீபாவளி கூடாது, கொண்டாடவேண்டாம், என்று மக்களிடம் பேசுவதுதான், தீபாவளிக் கண்டனமா!!"

"என்ன காம்ரேட்! புதிர்போடுகிறீர் ......வேறு எப்படிக் கண்டிப்பது..."

"தீபாவளிப் பண்டிகை கொண்டாடுக என்று எங்கள் கட்சி அறிக்கை விட்டதா?"

"இல்லை........."

"இல்லையல்லவா! அதற்குமேல் ஒரு கண்டனமும் உண்டா—தேவையா... ...."

"பாட்டாளிகளிலே பெரும்பாலோர் தீபாவளி கொண்டாடினர்களே"

"கொண்டாடட்டுமே! அதைத் தடுத்து, அவர்களுடைய சுதந்திரத்தை அழிப்பதா!! கம்யூனிஸ்டு கட்சி ஒரு நாளும் அப்படிப்பட்ட பொதுஜன விரோதமான காரியத்தை, வெகு ஜனவெறுப்பைக் கிளறும் காரியத்தை மேற்கொள்ளாது. தீபாவளியோ, கார்த்திகையோ, ஓணமோ, அவிட்டமோ, சதுர்த்தியோ, ஜெயந்தியோ, திதியோ திருப்பல்லாண்டோ, எதை வேண்டுமானாலும், அவரவர்கள் இஷ்டம்போல் செய்துகொள்ளட்டும் —தாங்கள் தடுக்கமாட்டோம்......"

"அப்படியானால், அவ்விதமான பண்டிகைகள் தேவை, பாட்டாளியை வாழவைக்கும் சித்தாந்தம், முன்னேறச்செய்யும் தத்துவம் இந்தப் பண்டிகைகளிலே உண்டு, என்று எண்ணுகிறீரா?"

"இல்லை........."

"இல்லை என்கிறீர்......மக்களிடம் எடுத்துச் சொன்னால்தானே......"

"தெரியும் பிரதர்! தெரியும்! இது அசல் முதலாளிச் சூழ்ச்சி, எங்கள் பக்கம் திரண்டு நின்று, முஷ்டியை உயர்த்தி, செங்கொடியை ஏந்திக் கொண்டு, புரட்சிநடைபோடும் மக்கள் அணியைஉடைக்க, வகுப்புவாதக் கும்பல் முதலாளியுடன் அச்சு சேர்ந்து கொண்டு செய்யும் சதித்திட்டம், இதை எங்கள் 'சக்தி' அக்கு வேறு அச்சு வேருக்கி அம்பலப்படுத்தியிருக்கிறது; ஏமாறமாட்டோம்; தீபாவளியைக் கண்டித்தால், திரளான மக்கள் திடுக்கிட்டுப்போய், வெறுப்படைந்து கம்யூனிஸ்டுக் கட்சியின் கடமையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடும்; இதற்காகவே சூழ்ச்சி பேசுகிறீர்—எனக்கா தெரியாது; போன மாதம்கூட எங்கள் 'மொட்டைமாடி மாநாட்டில்' இதுபற்றி விஸ்தாரமாக விவாதித்து, சவிஸ்தாரம் அவ்வளவும் அலசி ஒரு முடிவு கட்டியிருக்கிறோம்"

"என்ன காம்ரேட்! என்னைத் திக்கு முக்காடச் செய்கிறீர். நீங்கள், அறிவுரை கூறினால்தானே மக்கள்திருந்துவார்கள்."

"அறிவுரை கூறுவதுதான் எங்கள் வேலையா! ஆவேச உரை! வர்க்க உணர்ச்சி! இதுதான் நாங்கள் ஊட்டுவோம்."

"ஜீரணமாகாதே! உள்ளே இருக்கும் மூட நம்பிக்கை நீங்கள் ஊட்டும் ஆவேச உணர்ச்சி, வர்க்கவிளக்கம் இவைகளைக் கெடுத்துவிடுமே......"

"மறுபடியும் மறுபடியும் ஊட்டுவோம்."

"எத்தனை முறை ஊட்டினாலும் உள்ளே தங்காது......"

"தங்காமல்தான், எங்கள் கட்சியில் மக்கள் திரளுகிறார்களா......"

"உங்கள் கட்சி என்று ஒரு இலட்சணமும் காணோமே. சந்தனப் பொட்டுக்காரன், சாத்து முறைக்காரன், தோப்புக்கரணம் போடுபவன், காவடி தூக்குபவன், மொட்டை அடித்துக் கொள்பவன், மகமாயிக்குக் காப்புக்கட்டிக் கொள்பவன், செடில் ஆடுபவன், சேமக்கலம் தட்டுபவன், தீபாவளி, அமாவாசை; கிருத்திகை—எல்லா 'ரகமும்' இயல்பையும் எண்ணத்தையும் துளியும் மாற்றிக்கொள்ளாமல், எப்போதும் போல, குருட்டுக் கொள்கையில் உழன்ற வண்ணம் கோவிந்தா போட்டுக்கொண்டிருக்கிறதே, உங்கள் கட்சி என்று, இந்தக் கூட்டத்தை எப்படிக் கூறமுடியும்—"

"இது, எங்கள் யூனிட் இன்னும் விவாதிக்காத பிரச்னை—நான் என் அபிப்பிராயத்தைக் கூறுவதற்கு இல்லை......"

"சரி, காம்ரேட்! தீபாவளிப் புரட்டு பற்றி மக்களிடம் பிரசாரம்செய்யவில்லை என்றீர்—இந்தக் காயம், தீபாவளிக் கண்டனத்தின் விளைவு, என்றீரே...',

"புரியவில்லையா......"

"பொருந்தவில்லையே......"

"பொருத்திக் காட்டட்டுமா......... இதோ, பாரும், 'ஜனசக்தி' படிக்கட்டுமா, கேள்வி பதில் பகுதி......கேள் பிரதர்! கேள்! கம்யூனிஸ்டுகளும் கம்யூனிஸ்டு அனுதாபிகளும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடலாமா?"

"நியாயமான கேள்வி-என்ன பதில் எழுதி இருக்கிறது?"

"ஜோரான பதில்! கொண்டாடக் கூடாது என்று பதில் இருக்கும் என்று தானே எதிர்பார்க்கிறாய், அதுதான் இல்லை. அவ்வளவு சோம்பேரித் தனமாக ஒரே வார்த்தையில் பதில் எழுதி தப்பித்துக்கொள்ளவில்லை, எங்கள் காம்ரேட். படிக்கிறேன் கேளும் பதிலை, மதமும் மதவழிபாடுகளும் தனி மனிதரின் உரிமை. அதில் யாரும் தலையிடுவதற்கில்லை. அவை அரசியலிலும் மக்களின் பொதுநலனிலும் தீமைகள்புரிவதைத்தான் எதிர்க்கிறோம். இதுதான் எமது பதில்!"

"காம்ரேட்! இதற்குப் பெயர் பதிலா? திருடலாமா கூடாதா என்று கேள்வி கேட்டால், திருடுவதும் பறி கொடுப்பதும் அவரவர் தனி உரிமை, அதில் பிறர் தலையிடுவது கூடாது, ஆனால் திருட்டுத் தொழில்மூலம் போட்டியும் பகைச்சலும் ஏற்பட்டுச் சமூகம் பாதிக்கப்படும்போது, கண்டிப்போம் என்று பதில் கூறுவதுபோல இருக்கிறதே, செச்சே—...!"

"என்ன செச்சே! கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரை தீபாவளி கொண்டாடுவதில்லை"

"இதில் என்ன காம்ரேட்! கீர்த்தி, கித்தாப்பு. எந்த அரசியல் கட்சியும் பண்டிகைகள் கொண்டாடுவதை, கட்சியின் திட்டமாக-வைத்துக்கொண்டில்லை. உங்கள் கட்சி மட்டும்தானா! மற்ற எல்லாக் கட்சிகளும், தங்களிடம் பிரச்னைகளுக்கு விளக்கம் பெறும் மக்களிடம், இப்படிப்பட்ட பண்டிகைகள் வேண்டும், வேண்டாம் என்று எடுத்துச் சொல்லும் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதில்லையே......"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது —கம்யூனிஸ்டுகட்சி தீபாவளி கொண்டாடச் சொல்வதுமில்லை — கட்சிக்காரர்கள் கொண்டாடினால், தடுப்பதுமில்லை......"

"தெளிவு! தெளிவு! பிரமாதமான அறிவும், நிரம்ப ஆண்மையும் வேண்டும் காம்ரேட்! செங்கொடி பிடித்துக் கொண்டு இந்த 'வௌவால்' வேலை செய்ய!"

"ஆனால், சுரண்டும் வர்க்கம் இந்தப் பண்டிகைகளைப் பயன்படுத்தினால், தாங்கள் கண்டிப்போம். இதோ கண்டன அடையாளம், எங்கள் காம்ரேட் ஒருவர் தீபாவளி கொண்டாடினர்— அவர்உரிமை! பட்டாசுக்கடைக்காரன், இந்தப் பண்டிகையைச் சாக்காக வைத்துக்கொண்டு, சுரண்ட முனைந்தான்—மக்கிப்போன பட்டாசு, அதிலும் அகிலஉலகிலும் அக்ரமம் செய்து வரும் அமெரிக்க மார்க்கட் பட்டாசு கொடுத்து ஏமாற்றப் பார்த்தான்— நான் தடுத்தேன்—இது வெடிக்காது, பாட்டாளியை ஏமாற்றாதே — என்று எச்சரிக்கை செய்தேன்.

வெடிக்காத பட்டாசு விற்காதே!
அமெரிக்க பட்டாசு விற்காதே!
பாட்டாளிகளே, பழைய பட்டாசு வாங்காதீர்கள்!

—என்று சுலோகம் தயாரித்துவிட்டேன், கிடுகிடாய்த்துப் போய்விட்டான், கடைக்காரன். இவன் என்ன தொக்கா! விழிப்புடன் வீறுகொண்டெழுந்து சேவைசெய்யும் கம்யூனிஸ்டு கட்சியின் முழக்கம் கேட்டால், எந்த முதலாளிதான் திக்கித் திண்றிப் போகாமலிருக்கமுடியும். அன்பரே! நண்பரே! என்று அவன் பாஷையில் பேசினன்—அசைந்துகொடுக்கவில்லை —தோழரே என்றான், சரி, நம்முடைய கட்சியின் வாசற்படிவரை வந்துவிட்

டான், முற்போக்கு முதலாளியாகிருன் என்று மகிழ்ந்து, என்ன்? என்றேன்'' சாம்பிள் பட்டாசு; நீங்களே கொளுத்திப் பாருங்கள்—திருப்தி இருந்தால் விற்கிறேன், இல்லையானால் தெருப் புழுதியில் போடுகிறேன், என்றான். ஒரு கட்டுக் கொடுத்தான்-கொளுத்தினேன்—வெடிக்காமலிருந்த பட்டாசு நான் கொளுத்தியதும், வெடித்தது; நான் சாமர்த்தியமாக விலகிக்கொண்டேன், ஆனால் அதற்குள் ஒரு தீப்பு தீய்த்துவிட்டது. பரவாயில்லை; இனி தீபாவளிப் பண்டிகையைப் பயன்படுத்திக்கொண்டு சுரண்டாதே என்று கடைக்காரனுக்கு எச்சரிக்கை செய்து விட்டுச் சென்றேன்''

காம்ரேட் கழுகாசலத்தின் 'தத்துவ'ப் போக்கு இப்படி வளருவது கண்டு, நான் உண்மையிலேயே, அச்சமடைந்தேன். என்ன இருந்தாலும் நண்பனல்லவா! இவ்வளவு வேகமாகவா தத்துவம் வளருவது! பரிதாபம்! பரிதாபம்!! ☆

வால்மீகியின் சீதை

வால்மீகி தனது ராமாயணம் என்னும் காவியத்தில் சீதையை ஒரு கற்புள்ள உயர்குணப் பெண்ணாக சித்தரிக்க வேண்டும் என்று கருதியிருந்திருக்கிறாரா? அல்லது சீதையைக் காமஉணர்ச்சிக் காதல் கொண்ட ஒரு சாதாரணப் பெண்ணாகச் சித்தரிக்க வேண்டும் என்று கருதி இருந்திருக்கிறாரா என்பது இந்தஆராய்ச்சியின் கருத்தாகும்.

இதில் எடுத்துக் காட்டப்படும் விஷயங்கள் எல்லாம் வால்மீகி இராமாயணத்தில் உள்ளவைகளே யாகும்.

சீதையின் பிறப்பு வால்மீகியால் இழித்துரைக்கப்பட்டிருக்கிறது.

(1) சீதை யாராலோ எப்படியோ பெற்று, கட்டாந்தரையில் போட்டு, புழுதியினால் மூடப்பட்டுக் கிடந்திருக்கிறாள்.

(2) இதனால் சீதையை அவள் பருவமடைந்து வெகு நாள் வரையிலும் யாரும் மணக்க வரவில்லை.

(3) வளர்த்த தந்தை இதற்காக வருந்தி இருக்கிறார்.

இந்தச் சங்கதியை வால்மீகி சீதையின் வாய்மொழியாகவே ஆரண்ய காண்டத்தில் ரிஷி ஆஸ்ரமத்தில் ரிஷியின் மனைவிக்குச் சீதையே சொன்னது போல் சித்தரித்து இருக்கிறார்.

சீதையின் குணத்தில் பரதன் அதிருப்திப் பட்டதாகவும் சீதையை பரதன் வெறுத்திருப்பதாகவும் சித்தரித்து இருக்கிறார்.

இதையும் வால்மீகி சீதையின் வாய்மொழியாகவே அயோத்தியா காண்டத்தில் ராமன் வனம் செல்லும்போது, சீதையை தன்னுடன் கூட வனத்திற்கு வரவேண்டாம் என்றும், தான் திரும்பி வரும்வரை பரதனிடத்தில் அவனுக்கு நல்லவளாய் நடந்து கொண்டு இரு; அதனால் நமக்கு இலாபம் கிடைக்கு மென்றும் சொன்னதற்குப் பதிலாக என்னை வெறுக்கும் பரதனிடத்தில் நான் இருக்கமாட்டேன், என்பதாகச் சீதை சொன்னதாகவும், இந்த உள்ள நகைகள் எல்லாம் நம்மை அறுபவித்துவிட்டு, காட்டுக்குப் போகும்போது நம்மைக் குள்ளப் பார்க்கிறான் என்றும், காட்டில் இராமனின் அழகைக்கண்டு வேறு பெண்கள் மோகித்து வசப்படுத்திக் கொண்டால் கண்டு இன்பமாட்ட மாய்ப் போய்விடுமே என்றும், எண்ணியதாகவும் சித்தரிக்கிறார்.

அன்றியும் சீதையைப் பார்த்து இராமன் "பிரதனால் பாராட்டத்தக்கவள் அல்ல" என்று இராமன் வாயால் சொன்னதாக சித்தரித்து இருக்கிறார்.

லட்சுமணன்வாயாலும், சீதையை ஒரு சாதாரணப் பெண் என்றும், சீதை கெட்ட நடத்தை உள்ளவள் என்றும் ஆரண்ய காண்டத்தில் சித்தரித்து இருக்கிறார்

சீதையை அவள் வாய்ப்பேச்சாலேயே "தன் மனைவியைப் பிறருக்கு விட்டுக் கொடுக்கும் கூத்தாடி போல் என்னைப் பரதனுக்கு விட்டு லாபம் அடையப் போகிறாயா—பேடியே ஆண்மையற்றவனே" என்றுங்கூடத் தன் கணவனைக் கேட்டதாக அயோத்தியா காண்டத்தில் சித்தரித்து இருக்கிறார்.

கணவன் சீதையை உன் நகைகளை எல்லாம் கழற்றி வைத்துவிட்டு வா என்று சொல்லியும் ஒரு தடவை கழற்றிவிட்டு மறுபடியும் போட்டுக் கொண்டே, காட்டுக்குப் போனதாகச் சித்தரித்திருக்கிறார்.

கணவன் பல தடவை சொல்லியும் நகைகளைக் கழற்றாமலே காட்டுக்குப் போனதாகச் சித்தரித்திருக்கிறார்.

சீதையின் கற்பைப்பற்றிக் கணவன் சந்தேகித்ததாகச் சீதை வாயாலேயே சித்தரித்திருக்கிறார்.

அது உண்மை என்று கருதும் படியாகவே இராமன் வாயாலும் நான் உன்னைச் சோதித்துப் பார்த்தேன் என்று சொன்னதாக அயோத்தியா காண்டத்தில் சித்தரித்திருக்கிறார்.

மற்றும் பல இடங்களிலும் சீதை கற்பில் சந்தேகிக்கப்பட்டதாக இராமன் வாயால் சொன்னதாகச் சித்தரித்திருக்கிறார்.

சீதை தனது மதிப்புக்குரிய கொழுந்தன் லக்ஷ்மணனை, அவனது நல்ல எண்ணத்தையும் அவன் செய்த சேவையையும் சிறிதும் அறியாமலும் நன்றி இல்லாமலும் தன் மேல் லட்சுமணன் ஆசைப்பட்டு, தன்னை அடைந்து அனுபவிக்கக் கருதியதாக வெளியில் சொல்லி, ஒரு சாதாரண இழிகுலப் பெண் நடந்து கொள்ளும் குணம் பேசுவது போல் சீதை வாயாலேயே எடுத்துக் காட்டிச் சித்தரித்திருக்கிறார். ★

சந்தாதாரர்கள் பார்வைக்கு

24—10—54 முதல் "திராவிட நாடு" சந்தாதாரர்களின் நெம்பர் மாற்றப்பட்டுப் புது நெம்பர் தரப்பட்டிருக்கிறது. சந்தாதாரர்கள் தங்கள் புதிய சந்தா எண்ணைக் குறித்துக்கொள்வதோடு, பணம் அனுப்பும்போதும், கடிதம் எழுதும்போதும் புதிய சந்தா நெம்பரையே குறித்து எழுதும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்



25. வழக்கு ஆரம்பமாகியது

பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் அன்று ஏராளமான கூட்டம். கோர்ட்டின் வெளியிலும் மக்கட் கூட்டம் பெருகியிருந்தது. ஒவ்வொருவர் கையிலும் ஏதாவதொரு பத்திரிகை இருந்தது. அவைகளில் ஆறுமுகத்தின் முழு வழக்கும் விவாதிக்கப்பட்டிருந்தது.

ஆறுமுகம் கோர்ட்டுக்குள் அழைத்துவரப்பட்ட மறுவினாடியே ஒரே சந்தடி ஏற்பட்டது.

"இதோ வருகிறான், கிள்ளாடி"

"பார்த்தா, தெரியலையா? இன்னும் பத்துபேரைக்கூட கொலை செய்வான்"

"போயும் போயும் மூனு நோட்டுக்கா இப்பேற்பட்ட பயங்கரக் கொலை செய்தான்"

"உத்தமநாதரை மாத்திரமல்ல; அவன்கிட்ட ஆசை வைச்சிருந்த பெண்ணையே கொலை செய்துவிட்டான்"

"தூக்குத் தண்டனை நிச்சயம்"

"தூக்கா......? கால் வேறு கை வேறு துண்டா, வெட்டி வெட்டித் தள்ளனும்"

இதுவும், இன்னும் பயங்கரமான வார்த்தைகளும் அங்கு நின்றவர்களின் வாயிலிருந்து உதிர்ந்தன.

ஆவேசத்தோடு கூடிவந்த கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு ஆறுமுகத்தை நிதிமன்றத்திற்குள் அழைத்துச் சென்றனர், போலிஸார்.

நடுவில், மாஜிஸ்ட்ரேட் அமரும் நாற்காலி உயரமான இடத்தில் இருந்தது. அதற்கு எதிரில், தாழ்வான இடத்தில் ஒரு மேஜை. அதன்மேல் உத்தமநாதரின் இரு பூட்சுகள்; ஆறுமுகத்திடமிருந்து பறிக்கப்பட்ட மணிபர்ஸ், மோதிரம், ரூபாய் நோட்டுகள்; அவன் வீட்டிலிருந்து எடுக்கப்பட்ட கம்யூனிச பிரசுரங்கள், பாக்யபவனத்திலிருந்த மண் வெட்டி, காரிலிருந்து கண்டெடுக்கப்பட்ட விஸ்கி பாட்டில் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன.

இடதுபுறத்திலிருந்த கூண்டிற்குள் இருந்த நாற்காலியில் ஆறுமுகம் அமர்த்தப்பட்டான். ஆறுமுகத்தைக் கண்டதும், நடுவில் உட்கார்ந்திருந்த நெடுமாறனும், நல்லமுத்துவும் சிரித்தவண்ணம் கைகாட்டினர். ஆறுமுகம் ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தான். அவ்வளவுதான் அவனால் முடிந்தது.

நெடுமாறனுக்கு எதிரில், வேறு இரண்டு மூன்று வழக்கறிஞர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களுக்குப் பக்கத்தில் இன்ஸ்பெக்டர் ஆதிமூலம். அவருக்குப் பின்னால் ஒரு போலிஸ்காரன் ஆகிய எல்லோரும் இருந்தனர். இன்ஸ்பெக்டர் ஆதிமூலத்தைக் கண்டவுடனேயே 'திக்' கென்றது ஆறுமுகத்திற்கு. பயந்து வேறு பக்கம் திரும்பினான். அங்கே பாஸ்கர், சமையற்கார சாமிநாதன், தோட்டக்காரக் குப்பன் எல்லோரும் அமர்ந்திருந்தனர்.

மற்றொரு மூலையிலே டிரைவர் கந்தசாமிகூட உட்கார்ந்திருந்தான்.

எல்லோரும் அவனையே உற்றுப் பார்த்தனர். அங்கு வந்தவுடனேயே இரத்த ஓட்டம் நின்றுவிடும் நிலை வந்துவிட்டது, ஆறுமுகத்திற்கு.

தன்னைச் சுற்றி நின்றுகொண்டு எல்லோரும் அவன் தலைமீது பெரும் பாராங்கல்லைத் தூக்கிப் போடுவதுபோல ஒரு உணர்ச்சி வந்தது. அப்படியே தலையைக் குனிந்துகொண்டான்.

இந்தச் சூழ்நிலையில், முன்னே ஒரு சேவகன் வர, பின்னால் மாஜிஸ்டிரேட் வந்தார்.

உடனே கோர்ட் குமாஸ்தா எழுந்து 'உஸ்' என்ற சப்தத்துடன் மேஜைமேல் இரண்டு தட்டு தட்டினார். நீதி மண்டபம் நிசப்தமாகியது.

மாஜிஸ்ட்ரேட் தன் ஆசனத்தில் அமர்ந்தவுடன், குமாஸ்தா தன் வணக்கத்தை அவருக்குத் தெரிவித்து மறுபடியும் பேச ஆரம்பித்தார்.

"அரசாங்கத்தின் சார்பாக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நகரப் பிரமுகர், தனவணிகர், ஆலை முதலாளி உத்தமநாதரின் கொலை வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. வாதி: அரசாங்கம்; பிரதிவாதி: ஆறுமுகம்!" என்று கூறிவிட்டு உட்கார்ந்தார்.

உடனே கருப்புக் கோட்டும், கண்ணாடியும் போட்டுக்கொண்டிருந்த வக்கீல் ஒருவர் எழுந்து, "என் பெயர் மகாலிங்கம்; உதவி சர்க்கார் வக்கீல். சர்க்கார் சார்பாக வழக்காட, அட்வகேட்ஜெனரல் வாலாடி கிருஷ்ணசாமி அய்யரின் உத்தரவின்பேரில் இங்கு வந்திருக்கிறேன்" என்று கூறிவிட்டு உட்கார்ந்தார்.

அடுத்து, நெடுமாறன் எழுந்து "குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் ஆறுமுகம் சார்பாக வாதாட நான் அமர்த்தப்பட்டிருக்கிறேன். என்னால் முடிந்தளவு நீதியும், நேர்மையுமான முடிவை கோர்ட்டார் அடைய உதவிசெய்வேன்" என்றார்.

குமாஸ்தா கொடுத்த வழக்கு விபரங்களை சில நிமிடங்கள் புரட்

டியபின், "வழக்கு ஆரம்பிக்கட்டும்!" என்றார், மாஜிஸ்ட்ரேட்.

உடனே குமாஸ்தா எழுந்து, "மிஸ் புஷ்பா அம்மாள்!" என்று மூன்று தடவை கூறிவிட்டு உட்கார்ந்தார்.

புஷ்பாவும் தன் இடத்தைவிட்டு எழுந்து வலது பக்கம் இருந்த சாட்சிக் கூண்டிற்கு வந்து நின்றாள்.

வழக்கப்படி கோர்ட்டில் எடுக்கப் படவேண்டிய விசுவாசப் பிரமாணங்கள் எடுக்கப்பட்டதும், புஷ்பா தன் வரலாற்றை விபரமாகக் கூறினாள். தான் குவின் மேரிஸ் காலேஜ் மாணவி என்றும், கொலையுண்ட உத்தமநாதரின் ஒரே மகள் என்பதையும், தன்னுடைய வயது இருபது என்பதையும், கூறினாள். இந்த ஆரம்பச் சடங்குகள் முடிந்தவுடன் சர்க்கார் உதவி வக்கில் மகாலிங்கம் எழுந்து அவளருகில் வந்தார்.

"மிஸ் புஷ்பா! சர்க்கார் உதவி வக்கில் என்ற காரணத்தால் இந்தப் பரிதாபகரமான நேரத்தில், உங்களிடத்தில், நான் கேட்கும் சில கேள்விகளுக்கு தாங்கள் கூறும் பதில் மிகுந்த அளவு, இந்த மர்மக் கொலையிலிருக்கும் சூதுகளையும், சூழ்ச்சிகளையும் வெளிப்படுத்தும்!" என்றார் மகாலிங்கம்.

புஷ்பா "கேளுங்கள். எனக்குத் தெரிந்ததைக் கூறுகிறேன்" என்றாள். "முதலில், அதோ குற்றவாளிக் கூண்டில் நிற்கும், அந்த ஆளைப்பற்றி உங்களுக்கு, என்ன தெரியும்?"

"அவன், எங்கள் காருக்குச் சென்ற வாரம் டிரைவராக அமர்த்தப்பட்ட, ஆறுமுகம். அவன் தந்தை ஒரு காலத்தில் எங்கள் தோட்டத்தில் வேலை செய்தான் என்ற காரணத்திற்காக, முன் பின் விசாரணையின்றி எங்கள் வீட்டுக் கார் டிரைவராக அமர்த்தப்பட்டான். அவன் வேலைக்கு வந்த அன்று மாலை என் தந்தைக்கு காரோட்டிச் சென்றான். இரவு என் தந்தையை அவன் திருப்பி அழைத்து வரவில்லை."

"உங்களுக்கும் அவன் கார் ஒட்டினனல்லவா?"

"ஆமாம்...?"

"உங்களுக்கு காரோட்டிய பொழுது அவன் நடந்து கொண்ட விதம் எப்படி? அவனுடைய நடத்தையில், எந்தவிதமான சந்தேகமும் கொள்ளவில்லையா?"

"இல்லை..."

"அவனை எங்கெல்லாம் அழைத்துப்போனீர்கள்?"

"அடையாறு வரை"

"தனியாகவா!"

"இல்லை. மிஸ்டர் நல்லமுத்துவும் அன்று என் கூட வந்தார்!"

"நல்லமுத்துவா...? அவருக்கும் ஆறுமுகத்திற்கும் ஏதாவது தொடர்புண்டா?"

புஷ்பா ஒருநிமிஷம் யோசித்தாள். இதற்குள் நெடுமாறன் துள்ளி எழுந்தார்.

"யுவர் ஆனர்! இந்தக் கேள்விகளுக்கும், கேசுக்கும் சம்பந்தமே இல்லை!" என்றார் நெடுமாறன்,

"இல்லையா? இதிலிருந்துதான் சில சூதுத் திட்டங்கள் வெளியாகனும்."

மாஜிஸ்ட்ரேட் பொதுவாக, "கேள்விகள் தொடரட்டும். பின்னல் பார்க்கலாம்" என்றார்.

வெற்றிப் பார்வையோடு புஷ்பாவின் பக்கம் திரும்பினர் மகாலிங்கம்.

"ஆமாம், மிஸ் புஷ்பா. நல்லமுத்துவும், ஆறுமுகமும் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டவர்கள் போல் பழகினரா?"

"எனக்குத் தெரிந்த வரையில் இல்லை. நான்தான் இருவரையும் அறிமுகப்படுத்திவைத்தேன்."

"அடையாற்றில் என்ன நடந்தது?"

"சும்மா, நேரத்தைக் கழிக்கச் சென்றோம்."

"அப்படியானல் நீங்கள் மூவரும் ஒன்றுகச் சுற்றினீர்களா?"

"இல்லை. மூவரும் மரத்தடியில் அமர்ந்து பழவகைகள் சாப்பிட்டோம்."

"ஆறுமுகமும் கூடவா?"

"ஆம்."

"நீங்கள் அழைத்தீர்களா, அவனை?"

"இல்லை, நல்லமுத்துதான் கூப்பிட்டு, அவனுக்கும் பழம் கொடுத்தார்"

"நல்லமுத்துவுக்கும் ஆறுமுகத்திற்கும் ஏதாவது பேச்சு வார்த்தை நடந்ததா?"

"ஹூம், எதோ, சேரி வாழ்வோர் சீர்திருத்தத்தைப் பற்றி ஆறுமுகத்திற்கு விளக்கிக் கொண்டிருந்தார் நல்லமுத்து. முடிவில் சில துண்டுப் பிரசுரங்களைக் கூடக் கொடுத்தார்."

"அப்படியா. இந்தப் பிரசுரங்கள் நல்லமுத்து கொடுத்ததுதானே?" என்று கூறிக் கொண்டே மேஜை மேலிருந்த சில பிரசுரங்களை எடுத்துக் காண்பித்தார் மகாலிங்கம்.

அவைகளைப் பிரித்துப் பார்த்துவிட்டு "ஆம்" என்றாள் புஷ்பா.

"அது இருக்கட்டும். திரும்பும் பொழுது என்ன நடந்தது?"

"ஒன்றும் நடக்கவில்லை. அன்றிரவு எங்கள் வீட்டிற்கு வருவதாகக் கூறியிருந்தார், நல்லமுத்து. கட்டாயம் வரும்படியாக அழைத்துவிட்டு வந்துவிட்டேன். பங்களாவிற்குத் திரும்பிய சிலநிமிடங்களில் மறுபடியும் அப்பாவை ஏற்றிக்கொண்டு வெளியே போனான், ஆறுமுகம்"

"அந்த நேரத்தில், அவனுடைய நடத்தையில் ஏதாவது மாறுதல் இருந்ததா?"

"நான் கவனிக்கவில்லை."

"மிகவும் நன்றி, மிஸ் புஷ்பா. தாங்கள் போகலாம்." என்றார் மகாலிங்கம். புஷ்பாவும் எழுந்து தன் இடம் போனாள்.

அடுத்த சாட்சியாக சமையற்காரச் சாமிநாதன் விசாரிக்கப்பட்டான். வழக்கப்படி காபி கொடுக்க அதிகாலையில் உத்தமநாதர் அறை சென்றவன், அங்கு அவரைக் காணுமல், பாஸ்கரிடம் கூறியதாகவும், பின்னல் அன்று பூராவும் ஆறுமுகம் சரியாக சாப்பிடவில்லை என்பதையும், அவன் அதிக கலக்கமுற்று இருந்தான் என்பதையும் கூறினன்.

தோட்டக்காரக் குப்பன், ஆறுமுகம் வேலைக்கு வந்த அன்றிரவு பத்து மணிக்கு காருகில் நின்று கொண்டிருந்ததையும், மறுநாள் பூராவும் அவன் உண்ணக்கூட மறுத்து, ஏங்கிய நிலையில் நின்று கொண்டிருந்ததையும் கூறினன்.

குப்பனை ஒரே ஒரு கேள்விமட்டும் கேட்டார், மகாலிங்கம்.

"அன்றிரவு, ஆறுமுகத்தை நீ பார்த்தபோது, அவன் நிதானத்தோடு இருந்தானு?"

"நீ தானே முன்னுங்க, அவன் விழிச்சுப் பார்த்துக்கிட்டிருந்தான். அது வாஸ்தவங்க. ஏதோ நாழியாயிட்டுது என்று எண்ணிக் கொண்டு 'போகும்போது விளக்கை அணைத்துவிடு' என்று கூறிட்டு நான் போய்ப் படுத்துக்கிட்டேனுங்க."

அதோடு குப்பன் சாட்சி முடிந்தது. அடுத்தபடியாக டிரைவர் கந்தசாமி சாட்சிக் கூண்டில் ஏறினான். ஆறுமுகத்தைச் சிறுவயதிலிருந்தே தனக்குத் தெரியுமென்றும், தன்னுடைய கார் ரிப்பேர் ஷெட்டிலேதான், ஆறுமுகம் கார் ஓட்டக் கற்றுக்கொண்டதென்றும் கூறினான்.

"ஆறுமுகத்தைப்போலக் கார் ஷெட்டிலிருக்கும் பையன்கள் எல்லாம், சிறுவயதிலே குடிக்கக் கற்றுக்கொள்வதுதானே?" என்று குறுக்குக் கேள்வி கேட்டார், மகாலிங்கம்.

"சாதாரணமாக எல்லோருக்கும் அந்தப் பழக்கம் வந்துவிடுகிறது" என்றான், கந்தசாமி.

"சிலர், பிரயாணிகளின் மூட்டைகளைத் திருடுவதுகூட உண்டல்லவா?"

"ஹூம்... அதுவும் தான்"

"ஆறுமுகம் அந்த மாதிரி குடித்துவிட்டுத் திருடியது உண்டா?"

நெடுமாறன் மறுபடியும் எழுந்தார்.

மாஜிஸ்ட்ரேட் முறைத்துப் பார்த்தார்.

உடனே பேசாமல் உட்கார்ந்துவிட்டார்.

டிரைவர் கந்தசாமி பேச ஆரம்பித்தான்.

"சில நேரத்தில் அவன் குடித்து இருக்கிறான். அப்பொழுது நானே கண்டித்து, அடித்துமிருக்கிறேன். மூட்டைகள் திருடியதாக என் கவனத்துக்கு வரவில்லை"

"சரி, நீ போகலாம்" என்றார், மகாலிங்கம். ஆறுமுகத்தைப் பரிதாபமாகப் பார்த்துக்கொண்டே டிரைவர் கந்தசாமியும் சென்றுவிட்டான்.

அடுத்தபடியாக பாஸ்கர் சாட்சிக் கூண்டில் ஏற்றப்பட்டார்.

அதுவரை தலையைக் குனிந்துகொண்டு அங்கு நடந்த பேச்சு வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஆறுமுகத்திற்கு, பாஸ்கர் என்றவுடன் திடுக்கிட்டுப்போனான். மற்ற எல்லோரையும்விட, பாஸ்கரின்மேல்தான் அவனுக்கு அதிக பயம். ஆகவேதான், அவர் கூறப்போவதை நடுங்கிய உதடுகளோடு நிமிர்ந்து கேட்க ஆரம்பித்தான்.

பாஸ்கரும், தன்னுடைய குடும்பத்தின் பெருமையையும், தன் தந்தையின் சாந்த குணத்தையும், அவருக்கு இருந்த பலவிதமான தொடர்புகளையும் நன்கு விளக்கினார். ஆறுமுகம் தன் வீட்டிற்கு வந்ததையும், கொஞ்சம்கூட உலகம் அறியாவன்போல அவன் நடந்துகொண்டதையும், அவனுக்குப் பங்களாவிலேயே தங்க வசதிசெய்து கொடுத்ததையும் கூறினார். முதலில் தன் தந்தை காணாமல் போனவுடன், ஆறுமுகத்தின் மேல் தனக்கு எந்தவித சந்தேகமும் வரவில்லை என்றும், நல்லமுத்து 'அலிபி' ருஜூப்பித்தவுடன் கூடக் குற்றவாளி வேறு யாரோ என்றுதான் எண்ணிக் கொண்டிருந்ததாயும், அன்று தோட்டத்திலிருந்து பிணத்தைத் தோண்டி எடுத்தவுடன் ஆறுமுகம் மறைந்தது கேட்டதும் தான் அவன் மீது சந்தேகம் ஏற்பட்டது என்றும் கூறினார்.

"தங்களுடைய குடும்பம் சேரி வாழ்வோருக்குச் செய்திருக்கும் உதவிகள் எவ்வளவு இருக்குமென்று கூறமுடியுமா?" என்றார் மகாலிங்கம்.

"சரியான கணக்குத் தெரியாது. ஆனால் பல லட்ச ரூபாய்கள் இருக்கும். உத்தமநாதபுரம் என்ற காலனியே கட்டிக் கொடுத்திருக்கிறோம்."

"அப்படியானால், சேரிவாழ்வோரிடையே உங்களுக்கு விரோதிகள் இருக்கமுடியாதல்லவா?"

"இல்லை. நிச்சயமாக இல்லை."

"உங்கள் மில்லில் எத்தனை நாளாக வேலை நிறுத்தம் நடக்கிறது?"

"சென்ற ஒன்றரை மாத காலமாக......!"

"யார் இதற்கு மூல காரணம்?"

"நல்லமுத்துதான் ஸ்ட்ரைக் லீடர்!"

"மில் தொழிலாளிகளுக்கு கூலி உயர்வு கொடுக்காவிட்டால், முதலாளி குடும்பத்தையே பூண்டோடு ஒழித்துவிடுவதாகக் கூறினார்களா, அந்த ஸ்ட்ரைக் லீடர்கள்!"

"யுவர் ஹானர், இதைப் பலமாக ஆட்சேபிக்கிறேன்!" என்று கத்தினார் நெடுமாறன்.

"சரி, சரி. மிஸ்டர் பாஸ்கர்! கூலி உயர்வுக்காக விதண்டாவாதம் பேசிய அந்த லீடர்களைத் தவிர, உங்கள் தந்தைக்கு வேறுயாரும் விரோதிகள் இல்லையே?"

"நிச்சயமாகக் கிடையாது!"

மகாலிங்கம் கேள்விகள் முடிந்ததும், அதுவரை பேசாமலிருந்த நெடுமாறன் எழுந்தார்.

பாஸ்கரின் அருகில்வந்து, "நீங்கள்தானே உத்தமநாத டெக்ஸ்டைல்ஸ் முதலாளி?"

"இல்லை. உத்தமநாதா டெக்ஸ்டைல்ஸின் மானேஜிங் ப்ரொப்ரைட்டர்!"

"உங்கள் குடும்பத்தின் பொது சொத்துதானே மில்?"

"ஆம்?"

"நீங்கள்தானே மில்லை நடத்துகிறீர்கள்?"

"இதுவரை என் தந்தை நடத்தி வந்தார்; இப்பொழுது நான் நடத்துகிறேன்!"

"உங்கள் மில்லில் ஆண்டுக்கு வரும் லாபம் எவ்வளவு?"

"நிச்சயமாகத் தெரியாது!"

"சுமாராக இருபது லட்சம்ரூபாய் இருக்கும்?"

"இருக்கலாம்"

"இப்பொழுது தொழிலாளிகள் கேட்கும் கூலி உயர்வு எத்தனை லட்ச ரூபாய் செலவை அதிகப்படுத்தும்?"

"தெரியாது"

"அவர்கள் கோரிக்கையெல்லாம் நிறைவேற்றப்பட்டால். உங்களுக்கு

"கடவுள், மனிதனில் இருக்கிறான்; மனிதனுக்கு சேவை செய்வதே கடவுளைத் துதிப்பதாகும் என்ற முறையைக் கடைப்பிடித்தால், உலக சமரச நிலைக்கு வழிசெய்யலாம்"

—விவேகானந்தர்.

கிடைக்கும் லாபத்தில் மூன்று லட்ச ரூபாய்தான் குறையும்!"

"இருக்கலாம்"

"அப்படியானால் மற்ற மில்களில் கொடுக்கப்படும் சம்பளத்தைவிடக் குறைந்த சம்பளத்தை உங்கள் மில் கொடுப்பதன் காரணம் என்ன?"

"தொழிலாளிகளின் சம்பளத்தை நாங்கள் நிர்ணயிக்கவில்லை. தொழில் மத்யஸ்த கமிட்டி"

"அது கிடக்கட்டும்; உங்களுக்கு நகரின் பல பகுதிகளில் காலனி இருக்கிறது அல்லவா?"

"ஆம்; மைலாப்பூர், தியாகராய நகர், உத்தமநாதபுரம் ஆகிய மூன்று இடங்களில்"

"மைலாப்பூர், தியாகராய நகர் காலனிகளில், எந்த வகுப்பார் வசித்து வருகின்றனர்?"

"ஏன்......? மைலாப்பூரில் பார்ப்பனர்களும், தியாகராய நகர் பகுதியில் முதலியார்களும்"

"உத்தமநாதபுரத்தில்...?"

"ஆதித் திராவிடர்களும், வேறு சில ஏழை மக்களும்"

"இந்தப் பிரிவு எப்படி ஏற்பட்டது. மைலாப்பூர் காலனியில் உள்ள வீடுகளில் எதையாவது, எந்தக் காலத்திலாவது வேறு வகுப்பாருக்கு வாடகைக்குவிட்டிருக்கிறீர்களா?"

"அந்த அவசியமே வந்ததில்லை காரணம், மைலாப்பூர் வீடுகளும் காலியாவதில்லை. அப்படி ஒருவர் காலி செய்தாலும், அவர்கள் நண்பரோ, உறவினரோ அங்கு குடியேறிவிடுகின்றனர்"

"அப்படியானால், வீடு காலியானால் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு விடத் தயக்கமில்லையே?"

"அதெப்படி முடியும்? அந்தந்த வகுப்பார் ஒன்றுகக் கூடியிருப்பதையே விரும்புகின்றனர். உண்மையிலே, தாழ்த்தப்பட்ட வகுப்பினன் ஒருவனால் மைலாப்பூர் வீட்டுக்கு வாடகையும் கொடுக்க முடியாது; கொடுத்தாலும் மைலாப்பூரில் வரவேற்கப்படமாட்டான்."

"அப்படி உங்களுக்கு யார் சொன்னார்கள்?"

"நானே அறிந்து கொண்டேன்,"

"மைலாப்பூர் பகுதிகளிலும், தியாகராயநகர் பகுதிகளிலும் குமாஸ்தாக்களுக்காக கட்டியுள்ள பல சிறு வீடுகளை, பார்ப்பனரையும், முதலியாரையும் தவிர்த்த மற்றையோருக்கு கொடுக்க மறுத்துவிட்டீரா?"

"அந்த மாதிரி செய்ய எனக்கு பூரண உரிமை உண்டு."

"அது கிடக்கட்டும் உங்கள் குடும்பம், பல லட்ச ரூபாய்களை சேரிவாழ்வோர் முன்னேற்றத்திற்காகச் செலவிட்டதாக சற்றுமுன் கூறப்பட்டது. உத்தமநாதபுரத்திலே இருக்கும் ஐந்நூறுக்கு மேற்பட்ட குடிசைகளில் வரும் வாடகையின் ஒரு பகுதிதானே அந்தப் பணம்?"

"ஏதோ, பணம் பணம் தானே?"

"அது சரி. உங்களுடைய உதவியின் மூலம் சேரிவாழ்வோன் யாராவது ஒருவன் படித்துப்பட்டம் பெற்றிருக்கிறானா?"

"உத்தமநாதபுரத்தில் ஆரம்ப பள்ளிகள் வைத்திருக்கிறோம். மற்றபடி படிக்கவைத்துப் பட்டம் வாங்கிக்கொடுப்பது எங்கள் வேலையல்ல. அது சர்க்கார் செய்யவேண்டியது!"

கோர்ட்டில் பலத்த கைதட்டல்.

நெடுமாறன் சில விநாடிகள் சுற்றிப் பார்த்தார், மறுபடியும் பாஸ்கரைப் பார்த்தவண்ணம், "ஆறுமுகம் போன்றோரை தனித்து, மிக மோசமான குடிசைகளில் வாழச் செய்து, கல்வியறிவு புகுத்த நீங்கள் ஏதும் செய்யாததினால்தான் உங்கள் தந்தை கொல்லப்பட்டார் என்றால் அது தவறில்லை, தெரியுமா, மிஸ்டர் பாஸ்கர்"

"நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை"

"புரியும்..........என்றைக்காவது ஒரு நாள் புரியும்!"

நெடுமாறன் தன் இடத்தில் போய் அமர்ந்தார். பாஸ்கரும் தன் இடம் ஏகினர்.

குமாஸ்தா எழுந்து "நல்ல முத்து!" என்று கூப்பிட்டார்.

அடுத்த சாட்சி நல்லமுத்து என்றதும் கோர்ட்டில் ஒரு கலகலப்பு ஏற்பட்டது. நெடுமாறனுக்கும் பாஸ்கருக்கும் நடந்த சம்பாஷணைக்கு அர்த்தம் தெரியாமல் உட்கார்ந்திருந்த ஆறுமுகம் அவ-

லோடு நல்லமுத்து பக்கம் திரும்பினன். நல்லமுத்து. புன் முறுவலோடு சாட்சிக் கூண்டேறினன்.

(தொடரும்)

★

லாமா

திபெத் நாட்டை ஆளும் குழந்தை மன்னர்களைத்தான் தலாய்லாமா என்றும் பஞ்சன் லாமா என்றும் சொல்லுகிறார்கள். இவ்விருவருக்கும் வேற்றுமை என்ன? தலாய்லாமா கொம்புஉள்ளவர் என்றும், பஞ்சன் லாமா கொம்பு இல்லாதவர் என்றும் பாமர ஜனங்கள் கூறுவார்கள்! ஆனால் இந்த இரண்டு லாமாக்களையும் திபெத்மக்கள் சற்றேறக்குறைய கடவுளாகவே கருதுகின்றனர். இந்த இருவரும் புத்த பகவானின் அவதாரங்கள் என்பது திபெத்ஜனங்களின் சித்தாந்தம்.

தலாய்லாமா திபெத்தின் அரசியல் அதிபராகத் திகழ்கிறார். தலாய்லாமாவுக்கு மரணம்இல்லை என்று திபெத் வாசிகள் கருதுகிறார்கள். ஒரு தலாய்லாமா மாண்ட அதே விநாடியில் அவர் குழந்தையாகப் பிறக்கிறார் என்பது அந்த நாட்டினரின் நம்பிக்கை. தலாய் லாமா இறந்ததும் திபெத் தலைவர்களும் மதகுருக்களும் லாஸா நகரை அடுத்துள்ள தெய்வீக ஏரியில் சென்று பார்ப்பார்கள். அப்போது அவர்களுடைய கண்களுக்கு ஒரு முகம் தெரியுமாம். உடனே அத்தகையமுகத்துடன் அந்த நேரத்திலே திபெத்தைச் சேர்ந்த எந்த இடத்தில் குழந்தை பிறந்தது என்பதைத் தேடிப் பார்த்து மேற்படி குழந்தைக்கு உடனே அடுத்த தலாய் லாமாவாகப் பட்டம் சூட்டுகிறார்கள். இப்போது திபெத்தை ஆட்சி புரிபவர் பதினாலாவது தலாய் லாமா ஆவார். இவரிடம் திபெத் ஜனங்களுக்குள்ள பயபக்திக்கு எல்லையே இல்லை. தலாய் லாமாவைக் கடவுளின் அவதாரம் என்று அவர்கள் கருதுவதால், அவருக்காக அவர்கள் எத்தகைய தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

திராவிடநாடு

காஞ்சி] 31—10—54 [ஞாயிறு

சென்று திரும்புகிருர்!

★

ஒரு காலத்தில் சியாங்கே—ஷேக்கின் நண்பராக இருந்த நேரு பண்டிதர் இன்று அவருடைய நேர் விரோதியான மா-சே-துங்கோடு கைகுலுக்கி மகிழும்நிலே ஏற்பட்டதை எண்ணிப் பார்க்கும் எவருக்கும், இனி இந்த உபகண்டமும் சீனத்துச் செம்மையான நிலேயைப் பெறக்கூடும் என்ற ஆசை உண்டாகாமல் இருக்கமுடியாது. ரஷ்யாவுக்குப் பக்கத்தில் சீன! சீனவுக்குப் பக்கத்தில் இந்தியா! ரஷ்யாவின் வாடை சீனவுக்கு வீசிற்று—செழிப்படைந்தது. உலகம் முழுவதுமே சீனவைப் பார்க்கிறது—பரவசப்படுகிறது. அந்த அளவுக்கு நவசீன குறைந்த காலத்தில் நிறைந்த முன்னேற்றங்களேச் செய்து காட்டியிருக்கிறது. இந்த உபகண்டத்தைப் போலவே சீனவும் ஒரு காலத்தில் மிகமிகப் பிற்போக்கான நிலேயில் இருந்ததுதான். ஆனல் இன்று! உலகமே கண்டு வியக்கும் வகையில் முன்னேறியிருக்கிறது. இந்தச் சீரிய முன்னேற்றத்தைக் கண்டு, சிந்தை மகிழ்ந்தவண்ணம் சீனத்து மண்ணில் சிலகாலம் பவனி வந்து, தம்முடைய நாட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிருர் நேரு பண்டிதர்.

சீனத்தை விட்டு, இந்த உபகண்டத்துக்கு வருவதற்கிடையில், அவர், வேறு பல இடங்களேயும் பார்த்துவர முடிவு செய்திருப்பதாகச் செய்திகள் நமக்கு அறிவிக்கின்றன. சீனத்தில் கண்ட செழிப்புச் சிந்தனேயை, அவர் இனிப் பார்க்க இருக்கும் இடங்களில் காணப்படும் காட்சிகள் சிதைத்து விடக்கூடாதே என்று, நாம் மட்டுமல்ல, ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் அக்கரை கொண்ட எவருமே எண்ணத்தான் செய்வர். ஆனல், சீனத்துக்கும் இந்தியாவுக்கும் எந்தளவு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்பதை சந்தேகத்துடனேயே பேசியிருக்கிருர், நேரு பண்டிதர். நவசீனவிலிருந்து விடைபெறும் சமயத்தில், பீகிங் நகரிலுள்ள ரேடியோவில், தமது கருத்தைத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிருர்.

"இரு நாடுகளுக்கும் உள்ள பிரச்னேகள் சிறிது வேறுபட்டிருந்தாலும், அவைகளேப் பின்பற்றும் முறைகள் ஒரே மாதிரியாக இல்லாவிட்டாலும், இரு நாடுகளும் ஒத்துழைக்கலாம். இரு நாடுகளுக்கும் இருக்கவேண்டிய முக்கியமானவை, சகிப்புத் தன்மையும், நேச எண்ணமும் தான். இவைகள் இரண்டுமிருந்தால் மற்றவை தாஞக வந்துவிடும். இந்தியாவிலும் சீனவிலும் இவ்விரண்டும் இருக்கின்றன என்று எனக்குப்படுகிறது."

இது, இந்தியாவையும் சீனவையும் ஒரு தன்மை வாய்ந்த நாடுகளாகச் செய்வதற்கு, நேரு பண்டிதர் வெளியிட்டிருக்கும் கருத்தாகும். ஒன்று சகிப்புத் தன்மை, மற்றென்று நேச எண்ணம். இந்த இரண்டும் இருந்துவிட்டால், கட்டாயம் இந்தியா—சீனவாகும் என்பது, பண்டிதரின் கனவு. ஆனல், பண்டிதர் கூறும் சகிப்புத் தன்மையையும் நேச எண்ணத்தையும், எந்தெந்த வகைகளில் பயன்படுத்திஞல், சீனவை, இந்தியாவில் காணமுடியும் என்பதற்கு பண்டிதர் விளக்கம் கூறவில்லே. விளக்கம் கூறுவது ஒருபுறம் இருக்க, பண்டிதரால் கூறப்பட்ட சகிப்புத் தன்மையும் நேச எண்ணமும், இரண்டு நாடுகளிலும் இருக்கின்றனவா என்பதையே அவர் நம்ப முடியாத நிலேயில்—அல்லது தெரியாத நிலேயில்—கூறியிருக்கிருர். அதாவது, "சகிப்புத் தன்மையும் நேச எண்ணமும், இரண்டு நாடுகளிலும் இருப்பதாக எனக்குப்படுகிறது" என்றுதான் பேசியிருக்கிருரே ஒழிய, நிச்சயமாக இருக்கிறதென்று அவரால்லேயே கூற முடியாமற் போய்விட்டது. காரணம் என்ன? இதில் அவருக்கே சந்தேகம்!-இருக்கிறதோ இல்லேயோ என்று! எனவே தான், இப்படிப் பேசியிருக்கிருர்.

இதை, பொறுப்பற்றவர்கள்-ஏனேதானேக்கள் கூறினுலாவது, ஏதோ அவர்கள் தட்டிக் கழிக்கும் முறையில் பேசுகிருர்கள் என்று வாளா இருந்து விடலாம். ஆனல், பேசியவர், பொறுப்பு வாய்ந்தவர். ஒரு நாட்டின் 'தலேவிதி'யை நிர்ணயிக்கும் நிலேயிலிருப்பவர். இன்னெரு நாட்டிலே இருந்துகொண்டு, அந்நாட்டின் தலேவரைத் தம் முன்னுலே உட்கார வைத்துக்கொண்டு இவ்விதம் பேசியிருக்கிருர். நேருபண்டிதரின், ரேடியோ பிரசங்கத்தை பக்கத்தில் கேட்டுக்கொண்டிருந்த மா-சே-துங், இவரைப்பற்றி என்ன நினேத்திருப்பார்? உள்ளூரச் சிரித்திருப்பார்; அது பண்டிதரின் பேச்சை வரவேற்கும் புன்முறுவலாக வெளியே பரிணமித்திருக்கும்; அதைக் கண்டு பண்டிதரும் மகிழ்ந்திருப்பார்.

ஒரு நாட்டுக்குத் தேவையான நேச எண்ணத்திலும், சகிப்புத்தன்மையிலும், ஏன் நேரு பண்டிதர் சந்தேகிக்க வேண்டுமென்று மா-சே-துங்கால் எண்ணுமலிருந்திருக்கமுடியுமா? சகிப்புத்தன்மை, நேச எண்ணம் ஆகிய இரண்டையும் அடிப்படையாக வைத்துத்தானே, சீனம் இன்றைக்கு இந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது. இந்த முன்னேற்றத்தைக் கண்ட பிறகுதானே, நேரு பண்டிதர், அவ்விரண்டின் அவசியத்தையும்பற்றிப் பேசியிருக்கிருர். ஆனல், சீனத்தில் கண்ட முன்னேற்றங்களே, இந்தியாவிலும் செய்யமுடியாதென்பதாலோ என்னவோ, அவர் பேச்சில் வேறு சில கருத்துக்களேயும் வெளியிட்டிருக்கிருர், "இரு நாடுகளுக்கும் உள்ள பிரச்னேகள் சிறிது வேறுபட்டிருந்தாலும், அவைகளேப் பின்பற்றும் முறைகள் ஒரேமாதிரியாக இல்லாவிட்டாலும்-ஒத்துழைக்கலாம்".

வேறுபட்ட பிரச்னேகள்! பின்பற்றும் முறையில் பேதங்கள்!! இருந்தாலும், ஒத்துழைக்கலாம் என்று கூறுகிருர். இது எப்படிச் சாத்தியமாகுமென்று அவருக்கே புரியாது. பேசிய இடம், அவரை அவ்விதம் பேசச் செய்ததே தவிர,சீனவின் முன்னேற்றத்தை இந்தியாவில் செய்யமுடியாதென்பது அவருக்கே தெரியும். பண்டிதரின் ஆட்சி முறையும்; அதைச் சார்ந்துள்ள சூழ் நிலேகளும், அவரை அந்தக் காரியத்தைச் செய்ய ஒருபோதும் இடந்தராது. இந்த உபகண்டம், பெயரளவில் சுதந்திர நாடே ஒழிய, இன்னமும் அது முதலாளிகளின் கைப்பாவையாகவே இருந்துவருகிறதென்பதை அவ்வப்பொழுது ஏற்படும் சம்பவங்கள் உலகிற்கு அறிவித்தவண்ணம் உள்ளன. டாடா, பிர்லாபோன்ற பண முதலேகள், இங்குள்ள ஆட்சியை ஆட்டிப் படைக்கின்றன என்பதை 'ஆரூடம்' கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதில்லே. ஆனல், சீன, இப்படிப்பட்டபணமுதலேகளின்பிடியினின்றும் அறவே விடுபட்டு, சுதந்திரமாக வாழுகிறது. அங்கே செய்யப்படுகிற ஒவ்வொரு சீர்திருத்தமும் அந்நாட்டிலுள்ள அத்தனே பேருக்கும் சமமாக அனுபவிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. சீனவில், முப்பது கோடி மக்கள் சொந்த நிலம் உள்ளவர்களாக உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர், நவசீன ஏற்படுவதற்குமுன், நிலமற்ற விவசாயக் கூலிகளாக அடிமை வாழ்க்கை நடத்திவந்தவர்கள். இப்பொழுது அவர்களுக்கெல்லாம் தேவையான அளவு நிலம்

கொடுத்ததோடு, போதிய அளவு விதை, உரம் முதலியனவும் கொடுத்து உதவுகிறது சீன சர்க்கார்.

ஆனால், இங்கே நிலைமை என்ன? இங்கே எத்தனை கோடி மக்கள் வாழ்கிறார்கள் — முப்பத்தாறு கோடி மக்களில் எத்தனை பேருக்கு நிலம் உண்டு? இங்கும் நிலச் சீர்திருத்தம் பேசத்தான் செய்கிறார்கள்; தேசியத் தலைவர்கள். ஆனால், சீனாவில் செய்து தருவதுபோல் இவர்களால் செய்து தர முடியுமா? அதற்கு இங்குள்ள நிலப் பிரபுக்கள் ஒத்துவருவரா? ஏதோ வாயளவில் நிலச் சீர்திருத்தம் பேச முடியுமே ஒழிய, ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் செய்யப்பட்டிருக்கும் சீர்திருத்தங்களை இன்றைய ஆட்சியாளர்களால் ஒருபோதும் செய்யமுடியாது. சீனத்திலே ஒரு மா-சே-துங்; ரஷ்யாவிலே ஒரு லெனின். எனவே, அங்கெல்லாம் சீர்திருத்தம் செய்யமுடிந்தது. இங்கு? நேரு பண்டிதரன்றோ நாட்டை ஆள்கிறார்! அவரைச் சுற்றியுள்ளவர்கள், சீனாவையும் ரஷ்யாவையும் இங்கு வர விடமாட்டார்கள். அந்த அளவுக்கு அவர்கள் ஆதிக்கம் இங்கு அரசோச்சுகிறது. எனவேதான், நேரு பண்டிதரால், சீனாவை இந்தியாவில் காணமுடியாது என்று திட்டவட்டமாகக் கூறுகிறோம். அதனாலேதான் அவரும் அவருடைய பேச்சில் மழுப்பியிருக்கிறார். நாமும் ஒரேயடியாக சீனாவை இங்கு கண்டுவிடலாம் என்று கூறும் அளவுக்குக் கருத்தற்றவர்களல்ல. இந்நாட்டிற்கேற்றவகையில்—இங்குள்ள சூழ்நிலைகளை அனுசரித்துச் செய்யக்கூடிய சீர்திருத்தங்களைக் கூட இன்றைய ஆட்சியாளரால் செய்யமுடியாதென்றுதான் நாம் கூறுகிறோம்.

இங்கே, இந்திய சுதந்திர ஆட்சியின் கீழ் வாழும் ஒருவன், தான் வசிக்கும் வீட்டிற்குத் தரவேண்டிய சர்க்கார் வரிப் பணத்தைத் தரமுடியவில்லை யென்றால், அவனுடைய சொத்துக்கள் சர்க்காரால் 'ஜப்தி' செய்யப்பட்டு, வீட்டு வரி வசூலிக்கப்படுகிறது.

அங்கே, சீன சுதந்திர ஆட்சியின் கீழ் வாழும் ஒருவனுடைய நிலம் அல்லது வீடு, எந்தக் காரணத்தைக் கொண்டும் 'ஜப்தி' செய்யப்படுவதோ, வெளியேற்றப்படுவதோ கிடையாது. அந்த அளவுக்குச் சீர்திருத்தம் அங்கே செய்யப்பட்டுள்ளது.

அப்படிப்பட்ட சீர்திருத்தத்தை, சீனா போன்ற சுதந்திர நாடுதானே இந்தியாவும் என்று எண்ணிக் கொண்டு எதிர்பார்த்தால், பெற முடியுமா? இந்தியா சுதந்திரம் பெற்று ஏழு ஆண்டுகள் ஆகியும், ஏழை விவசாயி ஒருவன், தான் குடியிருக்கும் வீட்டிற்கு வரி கொடுக்க முடியவில்லையென்றால், 'வீட்டை ஜப்தி செய்' என்றுதானே 'நம்ம சர்க்கார்' உத்தரவு இடுகிறது!

இந்த நிலையில், "ஒத்துழைத்தால் முடியும்" என்று, நேரு பண்டிதர், பீகிங் நகரிலிருந்து பேசுகிறார். பேசித்தானே ஆகவேண்டும்! இடம் — அப்பேற்பட்டது! இந்த அளவுக்காவது பேசாவிட்டால், அந்நாட்டு மக்கள், அவரைப்பற்றி ஏற்கனவே கொண்டிருந்த பாசமும் நேசமும் குறைந்து விடுமல்லவா!

எனவேதான், சீனா அடைந்துள்ள முன்னேற்றத்தையும் வரவேற்றுப் புகழ்ந்து பேசவேண்டும், அதே நேரத்தில், தம்முடைய நாட்டின் நிலையையும் விளக்கவேண்டும் என்ற அடிப்படையில், நீங்கள் எங்கே? நாம் எங்கே? சீனாவை இந்தியாவில் காண முடியாவிட்டாலும், ஒத்துழைத்தால் முடியாமலா போகும் என்று இந்நாட்டு அரசியல் தந்திர முறையில் பேசிவிட்டு விடைபெற்றுக்கொண்டு வருகிறார். இங்கே வந்ததும் இனி என்னென்ன பேசுவாரோ யார் கண்டார்கள். சீனாவைக் கண்டேன்— சிந்தை களிகொண்டேன் என்ற அளவோடு தம்முடைய சீன யாத்திரைப் பிரசங்கத்தை முடித்துக்கொள்வாரோ அல்லது சீனாவை இங்கு காணமுடியாவிட்டாலும், அதன் வாடையாவது இங்கு வீசக்கூடிய அளவுக்கேனும் ஏதாவது சீர்திருத்தம் செய்ய முனைவாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

நேருபண்டிதர் சீனா செல்வதற்கு முன் "சென்று திரும்பிய பிறகாவது ...." என்று ஒரு தலையங்கம் 12—9—54-ல் எழுதியிருந்தோம். இப்போது சீனா சென்று திரும்பியுள்ளார். பழையபடியும் வேதாளம் முருக்க மரத்தில் ஏறிக்கொள்ளுமா என்பது இனி மேல்தான் தெரியும்.

★

தூத்துக்குடி வழக்கு

நடந்த ஓராண்டுக் காலமாக நடைபெற்று வந்த தூத்துக்குடி சதி வழக்கு 27—10—54-ல் முடிவடைந்து, தோழர் கே. வி. கே. சாமி உட்பட இருபத்தைந்து தோழர்களுக்கு விடுதலையும்; தோழர் தங்கப்பழம், சிவசாமி உட்பட இருபத்தைந்து தோழர்களுக்குச் சிறைவாசமும் தரப்பட்டுவிட்டது.

தோழர்கள் தங்கப்பழம் சிவசாமி இருவருக்கும் மூன்றுமாதச் சிறையும் மற்றவர்களுக்கு ஆறுமாதத்திலிருந்து இரண்டு வருடம்வரை சிறைவாசமும் தரப்பட்டுள்ளது.

சிறைப்பட்ட தோழர்கள் சார்பில் அப்பீல் செய்ய தலைமைக் கழகம் ஏற்பாடு செய்திருக்கிறது.

ஏஜண்டுத் தோழர்களுக்கு

ஏஜண்டுத் தோழர்கள் பலர், தங்கள் பாக்கியைச் சரிவர அனுப்பாமல் இருப்பதோடு, தங்களுடைய டிபாசிட் இருப்பதால் பாக்கியை ஒழுங்காக அனுப்பவேண்டிய அவசியமில்லையென்று எண்ணிக்கொண்டு தொல்லை தருகிறார்கள்.

தரவேண்டிய பாக்கிக்கும் டிபாசிட் தொகைக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்பதையும், கட்டியிருக்கும் டிபாசிட் தொகை ஏஜன்சிப் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ளும்போது பெறவேண்டியது என்பதையும் அன்புகூர்ந்து உணர்ந்து, இனிமேலாவது மாதாமாதம் பட்டியல்படி பாக்கியை அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

டிபாசிட் இருக்கிறதென்ற காரணத்தைக் காட்டிப் பாக்கியை அனுப்பாது நிறுத்திவைக்கும் ஏஜண்டுகளுக்குப் பத்திரிகை அனுப்புவது கண்டிப்பாக நிறுத்தப்படுவதுடன், அவர்களுடைய டிபாசிட் தொகையும், பாக்கிபோக உள்ளதைத் திருப்பி அனுப்பப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்
திராவிட நாடு

★ முத்தமிழ் ★

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார் தென் திசையைப்பற்றி ஒரு பாட்டு. "தென் திசையைப் பார்க்கின்றேன் என் சொல்வேன் அடடா! சிந்தையெலாம் துடிக்குதடா!" என்று அவர் பாடுவார். அப்போதெல்லாம் இத் தென்னிலங்கையை, இராவணன் வாழ்ந்த ஈழத்தை, தமிழைத் தமிழ்வேதம் நான்கை நாவுறைய வைத்த தமிழன் வாழ்ந்த ஈழத்தைப் பார்க்க வேண்டுமென விரும்பினேன்; ஆவலுற்றேன். அந்த ஆவல் இன்று பூர்த்தியாகியிருக்கிறது.

ஈழத்தையும் தென்னாட்டையும் இயற்கை பிரிக்கிறது. கடல் பிரிக்கிறது. ஆனால் நாம், பண்பாட்டால், தகைமையால், பழக்க வழக்கங்களால் ஒன்றாகவே இருக்கிறோம். நல்லதொரு நாட்டிலே சிறந்த சூழ்நிலையொன்றில் உங்களையெல்லாம் காண, அளவளாவக் கூடியவகையிலே ஒரு சந்தர்ப்பம் கிடைத்த பெருவாய்ப்பை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன்.

முத்தமிழ் என்று தமிழுக்கு மூன்று தன்மைகளை, மூன்றுபண்புகளை, எம்மொழியின் மேலே ஏற்றிப் பேசுகிறோம். இது தமிழுக்கே உரிய தனிப்பெருமையாகும். வேறு எந்த மொழிக்கும் இந்த மூன்று எண்ணை ஒட்டி வழங்கும் வழக்கம் இல்லை.

தமிழ் இயற்கையோடு இயைந்து வளர்ந்த மொழி. இதனாலேதான் தமிழுக்கு இத்தனிச் சிறப்பு ஏற்பட்டது. முத்தமிழ் என்ற தொடருக்குப் பொருள் காணும்போது, இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்று அர்த்தம் காண்கிறோம். இயற்றமிழ் உள்ளத்தின் இயல்பை வெளிப்படுத்துவது. இசைத்தமிழ் சொல்லின் பண்பைத், தொனியின் தன்மையை எடுத்துக் கூறுகிறது. நாடகத் தமிழ் செயலின் பான்மையைக் காட்டுகிறது.

'வா!' என்ற சொல்லை எடுத்துக் கொள்ளுங்கள். இச்சொல் வெறுமனே தனித்து நிற்கையில், வரும்படியாக அழைக்கும் ஒரு கருத்தை வெளியிடுகிறது. இப்போது இது இயற்றமிழ். 'வா!' என்ற அழைப்பை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு தொனியிலே அழைத்துப் பேசும்போது, அதற்கு ஓர் இசை, ஒலி ஒழுங்கு, ஏற்படுகிறது. இதே சொல்லைக் கூறுகையிலே, கையினாலே சைகை காட்டி அழைக்கும்போது, நாடகத் தமிழ் பரிணமிக்கிறது. ஆகவே மனிதனின் அன்றாட வாழ்விலே, இவ்வியல், இசை, நாடகம் என்னும் மூன்றும் பிரிக்கமுடியாதவாறு பிணைந்து கிடக்கின்றன. எனவேதான் மொழியின் இயல்பும் மூன்று திறப்பட்டது. இம்மூன்று தன்மையையும் நுணுகி ஆராய்ந்து தெளிவுபடச் சொல்லி வைத்திருக்கின்றார்கள். முத்தமிழ் ஆராய்ந்த நமது முன்னோர்.

> அண்மையில் ஈழம் சென்றிருந்த தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும், யாழ்ப்பாணத்து நகரமன்றத்திலும் "முத்தமிழ்" "தமிழர் நாகரிகம்" என்ற தலைப்புகளில் பேசிய சொற்பொழிவுகள் இங்கு தரப்படுகிறது.

முத்தமிழ் இயற்கையோடு வளர்ந்தது. அது தொன்மையானது. தமிழர் நாகரிகமும் தொன்மையானதுதான். நாகரிகத்தின் ஆரம்பம் ஆற்றங்கரை ஓரங்களிலேயே தொடங்கியது. யூபிரேட்டிஸ், டைகிரிஸ் நதிக் கரைகளிலே சுமேரிய நாகரிகம் தொடங்கியது. கங்கை ஆற்றங் கரையிலே ஆரியநாகரிகம் பிறந்தது. பஃறுளியாற்றங் கரையிலே, காவிரியாற்றங் கரையிலே தமிழர் நாகரிகம் தொடங்கிற்று.

லெமூரியாக் கண்டம் என்று கூறப்படும் கடல் கொண்ட குமரிக் கண்டத்திலேதான் முதல் உயிர்த் தோற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று உலக வரலாற்று ஏட்டுச் சுவடிகள் உரைக்கின்றன. ஆழ்கடற் புதையல்கள் இதற்குச் சான்று கூறுகின்றன. உலகின் குழந்தைப் பருவத்தில் வாழ்ந்த உயிரினங்களின் உடலமைப்பு, எலும்புக் கூடுகள் முதலிய புதைபொருள்கள் தரும் செய்திகள் இதை வலியுறுத்துகின்றன. உயிரினங்கள் தோற்றுவதற்கேற்ற தட்ப வெப்பநிலை குமரிக்கண்டப் பிரதேசத்திற்றான் முதன் முதலிலே தோன்றியது என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

உலகத்திலே தோன்றிய மனிதர்கள் உடனடியாகவே ஒரு மொழியைப் பேசவில்லை. கைச் சாடையாலே தமது கருத்தைத் தெரிவித்தனர். கண்சாடையும் எண்ணப் பரிமாறலுக்கு உதவிற்று. பின்பு ஒலிக்குறிகளை உபயோகிக்க ஆரம்பித்தனர். ஒலிக் குறிகளே சொல்லாக உருவெடுத்தன. சொற்களின் சேர்க்கை, மொழியாக ஆயிற்று. எனவே, ஒரு மொழி தோன்றுவதற்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் எடுத்திருக்கும். மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் இருந்ததென்றால், தமிழ் எத்தனை தொன்மை வாய்ந்ததாக இருக்கவேண்டும்? இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் என்றபடி எத்துணை சிறந்த இலக்கியங்களைச் செந்தமிழ் நூல்களைப் படைத்த அறிஞர்கள் வளர்த்த மொழியாக இருந்திருக்கும் தமிழ்? தொல்காப்பியத்துக்குமுன் எத்தனை ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் வாழ்ந்திருக்கவேண்டும்?

லெமூரியாக் கண்டத்திலே, அதாவது குமரிக் கண்டத்திலே, தோன்றிய நாகரிகம் தென்னாட்டு நாகரிகமாக ஆயிற்று. அதுவே அரப்பா மொகிஞ்சதாரோ நாகரிகமாக வடநாடு யூபிரேட்டிஸ், டைகிரிஸ் நதிக் கரையிற் சுமேரிய நாகரிகமாக வளர்ந்து, எகிப்து நாகரிகமாக, ரோம நாகரிகமாக, ஸ்பானிய நாகரிகமாக உருவெடுத்து ஐரோப்பா முழுவதும் பரந்தது என்பதை ஈராஸ் என்ற பாதிரியார் அழகுபட எடுத்துக் கூறினார்; தெளிவுபடுத்தினார். ஈராஸ் பாதிரியார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான் படித்துக்கொண்டிருக்கையிலே ஒரு கூட்டத்தில் பேசுகையிற் கூறினார்: "Father Heras is not speaking to you, but a Dravidian from Spain" "உங்கள் முன்

பேசுவது ஈராஸ் பாதிரியார் அல்ல, ஸ்பெயினிலிருந்து வந்த ஒரு திராவிடன்" என்று மேல்நாட்டு நாகரிகம் திராவிட நாகரிகத்தின் வளர்ச்சியே என்பதைக் கூறினார்.

*

எல்லாத் துறைகளிலும் அன்று உயர்வுகொண்டு மேம்பட்டு வந்த தமிழன், இற்றை நாட்களில் சீர்கெட்டுப்போன காரணம் என்ன? மனு தர்ம சாத்திரங்கள்போன்ற சமயக்கோட்பாட்டு நூல்கள் மடமையைப் புகுத்தி, அவனை அடிமைகொண்டு ஏமாந்தவனாக்கிவிட்டன. மிருகங்களிடையேயும், அற்பப் பிராணிகளிடமும் இல்லாத நடைமுறை—உயர்வு தாழ்வு என்ற பாகுபாடு மனிதனிடம் காணப்படுகிறது. இது வெட்கப்படக்கூடியது மட்டுமல்லாமல் வேதனைப்படக் கூடியதோர் விஷயமாகும். வீழ்ச்சியுற்ற தமிழன், தனது செல்வாக்கை—நாகரிகத்தை, பண்பாட்டை மீண்டும் பெற வேண்டுமானால், 'முன்னோர் வகுத்தது—முனிவர்கள் அருளியது' என்று கூறி தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளாமல், முதன்முதலாக சமுதாயத்திலே மலிந்து கிடக்கும் சாதி வேறுபாடுகளை, உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்ற பாகுபாடுகளைக் களைந்தெறியவேண்டும்.

அறிவுடையோர் எல்லாமுடையார் என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கொப்ப, சுய அறிவுடனும், ஆற்றலுடனும் வாழ்ந்த பண்டைத் தமிழன் வாழ்க்கைக்கு அவசியமான வளங்கள் யாவும் பெற்று வாழ்ந்தான். இயற்கையோடு இசைந்த அவன் வாழ்வில், மூடத்தனத்திற்கே இடமில்லாமலிருந்தது; ஆனால், இன்றோ, அவன் தனது அறிவைக் கைவிட்டதுடன், மூட பக்திக்கும், குருட்டு நம்பிக்கைகளுக்கும் தன்னைத்தானே ஆளாக்கிக் கொண்டான்.

இலக்கியம் தந்த பெருமை, தமிழரைப் பொறுத்தவரையில், ஆண்களை மட்டுமல்லாமல் பெண்களையும் தான் சாரும். புலவர்களாக மட்டுமில்லாமல் வெளிநாட்டுத் தூதுவர்களாகக்கூடப் பெண்கள் பணி புரிந்துள்ளனர். அவ்வையார் தொண்டைமானிடம் தூது சென்றார் என்பதை இலக்கிய நூல்கள் தெரிவிக்கின்றன.

இயற்கையின் தன்மை கண்டு, வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளை உண்டுபண்ணியவனும் தமிழன்தான்—இயற்கையைப் பயன்படுத்திக் கொண்ட பெருமையும் தமிழனுடையதுதான்!

ஆனால், வேகமாக முன்னேறிச் சென்றுகொண்டிருந்த பண்டைத் தமிழரின் அறிவு வளர்ச்சி, கி. பி. இரண்டாம் நூற்றாண்டோடு நிறுத்தப்பட்டுவிட்டதுமல்லாமல்; வரவர தேய்ந்து கொண்டே வந்திருக்கிறது. இவற்றிற்குக் காரணம் மூட பக்தியும், குருட்டு நம்பிக்கைகளும்தான்.

புராணங்களையும், இதிகாசங்களையும் நாம் எதிர்ப்பதாகச் சொல்லுபவர்கள், தங்கள் அறிவுக் கண்களால் பார்க்கவேண்டும். இலக்கியச் சுவைக்காக அத்தகு நூல்களில் எவற்றையாவது படித்தாலும் அவற்றிலுள்ள பொருத்தமற்ற கருத்துக்களை ஏற்கமுடியாது. அப்படி ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமென்றால், புராணத்திலே சொல்லப்படுகிறது என்ற காரணத்துக்காக பூமி தட்டையாகத்தான் இருக்கிறது என்று நம்பிக் கொள்வதா?

*

இலக்கியம் காலத்தைப்படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி. மற்றைய நுண்கலைகளெல்லாவற்றையும் விட இது சிறந்தது. இலக்கியம்—ஓவியம், சிற்பம் ஆகிய இரண்டிலும் பார்க்கச் சிறந்ததென உலக நாடுகளெல்லாமே ஒப்புக்கொண்டிருக்கின்றன. ஓவியத்தினால் கண்ணால் காணும் ஒரு நிகழ்ச்சிக்கே உருக் கொடுக்கமுடியும். ஓங்குயர் மலை, அதினின்றிழியும் வெள்ளி நீரருவி, பசும்புற்றரை, நீலக்கடல் முதலிய காட்சிகளில் ஓவியன் பார்வைத் தோற்றத்தைக் காட்டுகிறான். அதில் உணர்ச்சியைக் காணமுடியாது. — அலை, குளிர், ஓசை, பனி, காற்று முதலியவற்றைக் காண முடியாது. இது போலவே சிற்பத்தை வடிக்கும் சிற்பியால் அவனது சிற்பத்தில் கோபம், மகிழ்ச்சி, துக்கம் ஆகிய மூன்று மெய்ப்பாடுகளைத்தான் காட்ட முடியும். உள்ள எண்ணத்தைக் கூற அவனால் முடியாது.

இலக்கியம், கடலை, கடலின் அலையை, அலையின் ஓசையை, பூவை, அதன் மணத்தை, நிறத்தை, பெண்ணை, தோற்றத்தை, நெடியமலையை, அதினின்றிழியும் நீரருவியை நம்முன் அதே உருவில் கொண்டுவந்து காட்டும். உணர்ச்சியில் படுவதைக் கவிஞன் பாடுகிறான். அறிவியல் நிலையில் நிற்கும் கவிஞன் கலையை வளர்க்கின்றான் இலக்கியமூலம். இலக்கியம்தான் நாட்டின் நிலையை அறிவிக்கிறது.

நமது நாகரிகம் உச்ச நிலையில் இருந்தகாலத்தில் தேம்ஸ் நதிக்கரையில் மீன் பிடித்துக்கொண்டு திரிந்தவர்கள் அரசியல் கற்று இன்று உலக மக்களைவிட உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். நாம் பழங்காலத்தைப்பற்றிப் பேசும்போது பழங்கால நிலை வருங்கால நிலைக்குப் பயன்படுமா என்று பார்க்கிறோம். சிக்கிமுக்கிக் கல்லிலிருந்து தீயைக் கண்டுபிடித்து, சருகுகளில் மூட்டினால் அதனை சிறிது நேரத்துக்கு நிறுத்தலாமென அறிந்து, பின் எண்ணெய் திரி, விளக்கு முதலியவற்றைக் கண்டுபிடித்ததோடு நமது அறிவு நின்றுவிட்டது. அறிவு தேய்ந்துவிட்டது. இந்நிலை மாத்திரம் ஏற்படாவிட்டால்—நாம் தொடர்ந்து முன்னேறியிருந்தால் இன்று எந்நிலையிலிருப்போமென்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இலக்கியந்தான் பலவித நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழிலக்கியத்தையும், முத்தமிழையும் பார்த்து பழங்காலத்தை பார்க்க முயலவேண்டும். முத்தமிழில் வளர்ந்து இயக்கியங்களைத் தொடர்ந்துவைத்துப் பார்த்தால் நிலை புலப்படும். தமிழில், மொழிக்கு மாத்திரமன்றி வாழ்க்கைக்கே இலக்கியம் வகுக்கப்பட்டிருக்கிறது. இலக்கியம் இசையோடு சேர்ந்து நாடகத் தமிழாகியது.

தமிழிலக்கியங்களிலே நமக்குக் கிடைத்திருப்பவையில் தொன்மை வாய்ந்ததாகவும், முதன்மைவாய்ந்ததாகவும் கருதப்படுவது தொல்காப்பியமாகும். இது இன்றைக்கு ஏறத்தாழ 2500 அல்லது 3000 ஆண்டுகளுக்கு முன் எழுந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். இத்துணை தொன்மைவாய்ந்த தொல்காப்பியத்தையும், அதற்கு அடுத்துக் கருதக்கூடிய திருக்குறளையும், சங்க கால இலக்கியங்களான ஐங்குறு நூற்றையும் பதிற்றுப்பத்தையும், பரிபாடலையும், அகநானூற்றையும், பத்துப் பாட்டையும், கலித்தொகையையும் நற்றிணையையும், குறுந்தொகை

யையும் கி. பி. 2-ம் நூற்றாண்டிலெழுந்த சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும், கி. பி. 3ம் நூற்றாண்டிலெழுந்த திருவாசகத்தையும், 4-ம் நூற்றாண்டிலெழுந்த ஆசாரக்கோவையையும், 5-ம் நூற்றாண்டிலெழுந்த பெருங் கதையையும் 6-ம் நூற்றாண்டிலெழுந்த கல்லாடத்தையும், 7, 8-ம் நூற்றாண்டுகளிலெழுந்த அப்பர், சம்பந்தர் தேவாரங்களையும், 9-ம் நூற்றாண்டிலெழுந்த சுந்தரர் தேவாரத்தையும், 10-ம் நூற்றாண்டிலெழுந்த சிவக சிந்தாமணியையும், 11-ம் நூற்றாண்டிலெழுந்த பெரிய புராணத்தையும், 12-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய கந்தபுராணத்தையும், பிற்பகுதியில் தோன்றிய கம்ப ராமாயணத்தையும், 13-ம் நூற்றாண்டிலெழுந்த சிவஞான போதத்தையும், 14-ம் நூற்றாண்டிலெழுந்த தலபுராணங்களையும், 15-ம் நூற்றாண்டிலெழுந்த வில்லி பாரதத்தையும், அருணகிரி திருப்புகழையும், 16-ம் நூற்றாண்டிலெழுந்த சிறுபுராணத்தையும், தேம்பாவணியையும், 18-ம் நூற்றாண்டிலெழுந்த தாயுமானவர் பாடலையும், 19-ம் நூற்றாண்டில் தோன்றிய இராமலிங்கர் பாடல்களையும், 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்த பாரதியின் பாடல்களையும், இப்பொழுதுவெற்றி வலம் வரும் நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்களையும் வரிசையாகவைத்து ஆராய்ந்து பார்த்தால் தமிழகத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் இப்போது ஏற்பட்டு வரும் மறு மலர்ச்சியும் நன்கு புலப்படும்.

தமிழகம், யாருக்கும் அடிபணிந்ததில்லை என்பதற்கு சங்ககால இலக்கியங்கள் சான்று பகருகின்றன. போருக்குச் சென்றவர்கள் தோற்றதில்லை. கரிகாலன், நெடுஞ்செழியன் முதலியோர் இமயமலையில் கல்லெடுத்த வீர வரலாறுகளுக்கு இப்பொழுது இமயமலையில் ஒரு கணவாய் சோழன் கணவாய் என அழைக்கப்படுவது உதாரணமாக விளங்குகிறது. அக்கால இலக்கியங்கள் வாழ்க்கை நிலையை எடுத்துக் காட்டுகின்றன. இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்தனர் தமிழர் என்பதைப் பறையறைகின்றன. தமிழர்களின் வீரம், அறிவு முதலியவற்றின் உயர் நிலையை சங்க நூல்களில் அழகுபடக் காண்கிறோம். அந்நிலை மாறி அச்சப்பட்டுச் சாகும் நிலையில் தமிழகம் இருந்துவருகிறது. இதைத் தவிர்த்து புது உணர்ச்சி ஊற இலக்கியங்கள் பயன்படவேண்டும். நாட்டுக்குச் சுகாதாரம்போல, உள்ளத்தில் நல்ல சூழ்நிலை ஏற்பட கவிகள் பயன்படுகின்றன; பயன்படவேண்டும்.

அக்கால மக்கள், வில், வேல், வாள் முதலியவற்றை நம்பியே போரிட்டனரேயன்றி, வாயுவாஸ்திரம், வருணாஸ்திரம், அக்கினியாஸ்திரம் முதலிய கற்பனை அஸ்திரங்களை நம்பியிருக்கவில்லை. இடைச்செருகலான கற்பனைகள் இலக்கியத்தை அழித்துவிட்டன. பழைமைக்கு வளையலோ, நெளியலோ, பணியலோ கூடாது. மனித சமுதாயத்துக்கு ஏற்ற கருத்துக்களை எடுத்துப் பயன்படுத்தவேண்டும்.

மேலை நாடுகளில் அடிமைத்தனத்துக்கு எதிராக புரட்சி மனப்பான்மையை ஏற்படுத்தியுள்ளவை கவிதைகள்தான். இதுபோலவே நம் நாட்டுக்கும் அவற்றைப் பயன்படுத்தவேண்டும்.

★

கல்லக்குடி - அடுத்தகட்டம்

★ **கல்லக்குடி** வழங்கப்பட்டுவிட்டது; அறப்போர் வென்றது; என் வாழ்த்தும் வணக்கமும் தொடர்புகொண்ட அனைவருக்கும்.

★ **கல்லக்குடி** வழங்கிய மத்திய சர்க்கார் இரயில்வே அமைச்சருக்கும், மாநிலத்தின் மனப்போக்கை எடுத்துக்காட்டி, இந்த நீதி கிடைக்கச் செய்த சென்னை சர்க்காருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ **கல்லக்குடி** வழங்கப்பட்டிருப்பது, காமராசர் சர்க்கார், மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கும் மாண்பு கொண்டது என்பதற்கு மற்றோர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. மகிழ்கிறேன்.

★ **கல்லக்குடி** கிடைக்கத் தொண்டாற்றிய அனைவருக்கும், துணை நின்ற பல்லோருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

★ **கல்லக்குடி** கோரி நடத்தப்பட்ட கிளர்ச்சியின்போது உயிரிழந்த வீரத் தியாகிகளை எண்ணி உருகாமலிருக்க யாரால் இயலும்? அவர்களின் வீரத் தியாகம் வீண்போகவில்லை என்பது கண்டு, நமது மனமெலாம் எழுச்சிமயமாகிறது.

★ **கல்லக்குடி** காண அரும்பாடுபட்டு உயிர் நீத்த தோழர்களின் குடும்பத்தாருக்கு 'நினைவுக் காணிக்கை' செலுத்தவேண்டியது, தி. மு. கழகத்தின் கடமை; ஏன், அறம் அறிந்த அனைவருக்கும் அக்கடமை உண்டு.

★ **கல்லக்குடி** வெற்றி கண்ட தோழர்கள், இனி, அந்த 'காணிக்கை' உருவாக்கச் செய்யும் பணியினை அடுத்த கட்டமாகக் கொள்ளவேண்டுகிறேன். இது குறித்து தோழர்களின் சீரிய யோசனைகளை அறிய அவாவுள்ளவனாக இருக்கிறேன்.

அன்பன்

அண்ணாதுரை

★ அஜீர்ண அகவல் ★

[பரதன்]

பரமனை உணர்ந்து, மத நூல்களைப் பயில்வதால் நமக்குக் கலப்பற்ற நிரந்தர இன்பம் கிட்டுகிறது—என்று மத மந்திரி அல்ல, நமது மாநில நிதி மந்திரி பேசுகிறார்.

அவர் அங்ஙனம் பேசியிருப்பதால், அவர் 'ஓய்வு ஒழிச்சலில்லாமல்' மத நூல்களைப் பயின்றவண்ணம் இருக்கிறார்போலும் என்று எண்ணிவிடாதீர்கள்.

அன்றையக் கூட்டம் அப்படிப் பேச வைத்தது; அவ்வளவுதான்.

அவர், பரமனை உணர்ந்துவிட்டார் போலும், நிரந்தர இன்பம் பெற்றுவிட்டார்போலும்' யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், என்று அவர் நமக்கெல்லாம் தேவரசத்தை வழங்குவார்போலும் என்று எண்ணிவிடாதீர்கள்.

மோட்டார் தொழிற்சாலைத் திறப்பு விழாக் கூட்டமானால், யந்திரமேம்பாடு பற்றியும், மரம் நடும் விழாவுக்குப் போனால் அதன் மகாத்மியம்பற்றியும் பேசுவது மந்திரிக்கு அழகு என்ற முறையில், மார்கழி மாத பஜனைக்கூட்டத்தார் மத்தியில் பேச நேரிட்டதால், அவர் மதநூல்பற்றிப் பேசுகிறார் வேறில்லை.

நிதி அமைச்சராக அவர் அமர்ந்து ஆண்டு பல ஆகின்றன; இதுவரை ஒருநாளாவது, நிதிவளர்முறை, நிதி பாதுகாப்புத் திட்டம், இவைபற்றி ஒரு கருத்தும் வெளியிட்டதில்லை-அறிவீர்கள். நிதிமந்திரி இதுபற்றி ஏதும் பேசாதிருப்பதற்குக் காரணம் இப்போது தெரிகிறது, அவர் பரமனை உணரும் பக்குவம் பெற்று, பரிபூரண ஆனந்தம் பெற, பல ஏடுகளைப் படித்தவண்ணம் இருக்கிறார்; அதனால்தான் அவருக்கு, நிதிப்பிரச்னைபற்றிப் பேச நேரமோ, நினைப்போ இல்லை; சித்தத்தைச் சிவன்பால் வைத்துவிட்ட சீலருக்கு, செம்பொன்னும் ஓடும் ஒன்றாகத்தானே தெரியும், கேவலம் நிதிபற்றியா அவருடைய சிந்தனை செல்லும் என்றும் எண்ணிவிடாதீர்கள்.

இப்போது, ஓயாது, பகவானைப் பற்றியும் அவன் அருள்பற்றியும், அதைப் பெறும் மார்க்கம் குறித்தும், பெற்றோர் அடையும் பேரின்பம் குறித்தும் பேசிவரும் பெரியவர்கள், காலாகாலத்தில் மேனாட்டு முறைப்படி படித்து—தேவார திருவாசகமல்ல—தேம்பாவணியுமல்ல —இந்து லா, கிரிமினல் லா, ரோமன் லா போன்ற சட்ட நூற்களும், சரிதம், கணிதம், நடைமுறை விஞ்ஞானம், பொருளாதாரத் தத்துவம், ஷேக்ஸ்பியர், ஷெல்லி, கீட்ஸ், பைரன் போன்றாரின் கவிதைகள், இவைகளை எல்லாம் முறைப்படி படித்துப்பரீட்சையில்தேறி பட்டம் பெற்று, வக்கீல் வேலையில் ஈடுபட்டு, வழக்காடி வருமானம் தேடி, அதிலே கிடைத்த 'பவிசு'தனைத் தேசீய மார்க்கட்டில் விலை பேசி விற்று அல்லது சமயமறிந்து அடகுவைத்து, 'தேசோத்தாரகர்' ஆகி, பதவியில், வந்து அமர்ந்து, ஊதியம் பெற்று, ஊராளும் உயர்நிலை அடைந்தவர்கள்! கவனமிருக்கட்டும்!

பரமன் அருள்-நிரந்தர இன்பம்—மதநூல் பயில்வது—இவை எல்லாம், வாழ்க்கையில் அவர்கள் 'ஆனந்த அறுவடை' அடைந்த பிறகு பேசும், அஜீர்ண அகவல்!!

கேட்டுப் பாருங்கள், கோவையில் வழக்கறிஞராக இன்றைய நிதி அமைச்சர் வீற்றிருந்தபோது, கருப்புடை அணிந்து கட்சிக்காரருடன் உரையாடி, சாட்சிகளைப் பக்குவப்படுத்தி, 'கனம். கோர்ட்டாரவர்களிடம்' சமயத்துக்கு ஏற்றபடி கர்ஜனையோ, கெஞ்சுவதோ நடாத்தி 'காலட்சேபம்' செய்துவந்த நாட்களில் தேவார பாராயணம் எவ்வளவு செய்தார், திருப்புகழ் எங்கெங்கு பாடினார், பரமன் அருளை எவ்வெவ்வழியில் நாடினார், மத நூற்களை யாரிடம் கற்றார்—என்று! கேலிப் புன்னகைதான் பதிலாகக் கிடைக்கும்.

பரமன் அருள் நாடிப் பெற்றால் பரமானந்தம் கிடைக்கும், அதற்கான ஏடுகளைப் படியுங்கள் என்று உபதேசம் செய்யும் இந்த ஊராளும் அமைச்சர், தமக்குப் பதவி எனும் மாயா பந்தம் வேண்டாம் என்று உதறித் தள்ளிவிட்டு, பழனியப்பனின் பாத சேவையே போதும், அதுவே, சாலோக சாமீப சாரூப சாயுச்யம் தரவல்லது என்று கூறிக்கொண்டு, இருக்கச் சொல்லுங்கள் — பார்க்கலாம்!

பரமன் அருளிலே பரமானந்தம் இருக்கிறது, அதைப் பெறப் பக்குவமான ஏடுகள் உள்ளன, படித்துப் பயன்பெறுக என்று உபதேசம் மட்டும் செய்யாமல், நிதிஅமைச்சரின்குடும்பத்துப் பெரியவர் ஒருவர், செயலிலேயே அதைச் செய்துவருகிறார் — சுவாமி சித்பவானந்தா, மார்க்க போதகராக மட்டுமல்ல, சிறார்களுக்குச் சீரிய கல்வி அறிவூட்டும் செந்தண்மை பூண்டு ஒழுகிவருகிறார். அவர் போன்றார், பரமன்—பக்தி—பேரானந்தம் -என்று பேசினாலாவது நம்மாலே புரிந்து கொள்ளமுடியும்! இவர் பேசுகிறார்! அமைச்சர் ஆகவே பேசலாம் என்ற துணிவால்!

கடவுளை மறுப்போர் கிளம்பிவிட்டனராம்—'கனம்' கவலைப்படுகிறார்!

இந்தக் காலக்கோளாறு போக மாமருந்து, மடாலயம் காட்டும் மத போதனைதானாம்!!

கடவுளை மறுப்போர் என்று கூறிக் கண்டிக்கும்போது, கனம். அமைச்சர், மதத்துக்கு அல்ல, தாம் சார்ந்திருக்கும்—சாய்ந்துகொண்டிருக்கும் — கட்சிக்குத் தேவையான அரசியல் பிரசாரம் செய்வதாகவே எண்ணி மகிழ்கிறார்.

மந்தமதி படைத்தவனும் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு நமது இயக்கத்தவர் — பெரியார் உட்பட— எடுத்துக்கூறியாகிவிட்டது — எங்கள் வேலை கடவுள் மறுப்பு அல்ல ஐயன்மீர்! கடவுள் பெயர் கூறிக்கொண்டு கயவர் வெட்டும் படுகுழியை எடுத்துக்காட்டி, அதில் விழுந்துவிடாதீர்கள்என்று கூறுவதுதான், என்பதாக!

என்றாலும், பழிபோட்டுத் தலைவாங்குவது என்ற முறையில், இவர்கள், 'பக்தி' பேசுகிறார்கள், மக்கள், இவர்களுடைய போக்கைப் புரிந்துகொண்டனர்—சட்டை செய்வதுமில்லை என்பதையும் அறியாமல்.

எவ்வளவு அச்சமும் அவநம்பிக்கையும் இருந்தால், இராமாயணம் பற்றி, மாஜி கவர்னர் ஜெனரல் கட்டுரை எழுதுவார்!

பைபிளிடம் எவ்வளவோ நம்பிக்கை இருப்பதால்தானே, சர்ச்சிலோ ஐசன்ஹோவரோ, அவர்தம்புனிதநூல்பற்றி ஏதும் எழுதவேண்டிய அவசியம் இல்லை என்று இருக்கிறார்கள்.

தள்ளாத வயதில் தசரத குமாரன் பற்றியல்லவா எழுதித்தள்ளுகிறார், ஓய்வுவேண்டிப் பதவியிலிருந்து விலக்கிக்கொண்ட வேதியர்!

எதிர்க்கிறார்கள்—அதனால் தான் என் வேலையிலும் எனக்கு உற்சாகம் உண்டாகிறது, என்று வேறு பேசுகிறார்.

சென்னை மக்கள் சிரிப்பாய்ச் சிரித்தார்கள், ராதாவின் நாடகமூலம் இராமாயணத்தின் உண்மையைக் கண்டு.

இவ்வளவு இராமாயண ஆதரவுப் பிரசாரத்துக்குப் பிறகு, பெருந்தலைவர்களின் பேரு ஆடிய பிறகு, பாகவதர்களும், நாடகக்கலாநிதிகளும், கவிதை கட்டுரை, காலட்சேபம், கூத்து, ஓவியம், பஜனை, எனும் எத்தனையோ வழிகளிலே இராமாயணத்துக்கு மகத்துவம் ஏற்படுத்த முனைந்து மும்முரமாகச் 'சேவை' செய்தான பிறகு, இராமன் எப்படிஇருந்திருப்பான், என்னென்ன செய்திருப்பான் என்பதை, நெஞ்சுஉரமும் நடிப்புத்திறனும், கலை உலகினர் கண்டு ஆச்சரியப்படும் அளவுக்குப் பெற்றுள்ள நடிகவேள் ராதா நாடகமாடிக் காட்டமுடிகிறது! தங்கள் வேலை பயனற்றுப் போய்விட்டது என்பதை இப்போதும் உணர மறுப்பது எந்த வகையான வீரமோ, நாமறியோம்.

தனித் தனிக் கதைகளிலே புகுந்து ஆராய்ச்சி செய்தால், ஆபாசம் நெளிகிறது என்பதை அறிந்துகொண்டதால், இந்தப் பக்த சிகாமணிகள், பொது இலட்சியமான கடவுள்பற்றிப் பேசி—நாம் கடவுளை மறுக்கிறோம் என்று கூறி, நாட்டு மக்களுக்கும் நமக்கும் இடையே உள்ள நேசத்தை நாசமாக்கலாம் என்று பகற்கனவு காண்கிறார்கள்.

கடவுளை—ஏதோ இவர்கள் கண்டறிந்துவிட்டவர்கள்போலவும்—அவர் அருள் பெறும் மார்க்கம் அறிந்த மகான்கள்போலவும், பேசும் இந்த விற்பன்னர்கள், என்ன புதிய முறையை, தத்துவத்தைக் கூறிவிட்டார்கள்?

இதுவரை, பாம்பாட்டிச் சித்தரிலிருந்து பாம்புப் புற்றுக்குள்ளிருந்த படி இராமாயணம் பாடியதாகக் கூறப்படும் வால்மீகி உட்பட, என்னென்ன சொன்னார்களோ, அவைகளை அரைகுறையாக அறிந்துகொண்டு, பகுதியும் விளங்காத முறையில் பேசுவதன்றி பிறிதென்ன செய்யமுடிகிறது!

கடவுள் எல்லோருக்கும் உண்டு! கடவுள் எதற்காக? பேரின்பம் பெற. இன்பம் எங்கே இருக்கிறது? அறிவில் இருக்கிறது! அறிவு எப்படிக் கிடைக்கிறது? சிந்தனைமூலம்! சிந்தனை எப்படிச் சாத்தியம்? அறிவின் துணை கொண்டால்சாத்தியம்! ஆகவேபேரின்பம் பெற அறிவு தேவைப்படுகிறது.

அறிவினுள்நின்றானை ஆனந்தமானானை என்றும், அறிந்து அறிவாய் அறிவிப்பானை என்றும், முதறிஞர்கள் சொல்லிப் போனார்கள்.

இந்த நேர்ந்த உள்ளத்தினர் இதைவிட மேம்பாடான எதைச் சொல்லுவதற்குத் தகுதி உள்ளவர்கள்!!

[illegible]
[illegible]
திருமூலர்
சொக்கநாதர்
[illegible]

போதுமே, பெரியவர்கள் இவ்வளவும் கூறிவிட்டார்களே! இடம் இழக்க மனமிலாமல், இறைவனுக்கு வழக்கறிஞர்களாக மாறியிருக்கும் இந்தப் பெரியவர்கள், இதைவிடச் செம்மைப்படுத்தியா கூறப்போகிறார்கள்.

இத்தகைய இலட்சியத்தை நாம் மறுப்பதில்லை.

நாம் மறுக்கும் கடவுள் எது? காவலுக்குப் பிழைப்புக் கருவியாக உள்ள கடவுளை நிச்சயமாக நாம் மறுக்கிறோம் —கடவுள் தத்துவ விசாரணையிலே நமக்கு மேதாவித்தனம் இருக்கிறது என்று காட்டிக்கொள்ள அல்ல—மக்கள் வாழ்வுக்கு நம்மாலான பணி செய்யவேண்டும் என்ற ஆர்வத்தால்.

பார்ப்பன வடிவில், பகவான், சொல்லக் கூசும் செயல்களைத் திருவிளையாடல் என்ற பெயராலும், பக்தர்களைச் சோதிப்பது என்ற பெயராலும், செய்ததாகக் கூறப்படும் பெம்மான், புரோகிதம் நடாத்தி, உயர்ஜாதி என்று ஊரை மிரட்டி உல்லாச வாழ்வு வாழ்ந்து, பிறரைப் பேதையரென்றும் தாதரென்றும் மாற்றிவைத்து, அதனையே ஜாதிமுறை, நீதி என்று நெஞ்சாரப் பொய் சொல்லி, ஆதிக்கம் செலுத்த வைக்கும் ஆண்டவன், இதனை மறுக்கிறோம். தவறு?

புற்றிலே பாம்பு இருக்கிறது, என்று எச்சரிப்பவனிடம், உனக்குப் பூந்தோட்டமே பிடிக்காதா, என்று கேட்பது!

ஊசல் பண்டம் உடம்புக்கு ஆகாது என்று அறிவுரை கூறினால், சாப்பாடே கூடாதா என்று கேள்வி கேட்பது!

கள் பருகாதே என்று சொன்னால், தென்னைமீது என்னப்பா உனக்குத் துவேஷம் என்று வாதாடுவது!!

மலம்—பார்த்து நட என்று கூறினால், எத்துணை மதுரமான பண்டமாக இருந்தது இப்போது, மலம் ஆகிவிட்டது தெரியுமா என்று தத்துவம் பேசுவது.

காதொடிந்த ஊசியில், அறுந்து படும் நூல் இழையைக் கண்ணிழந்த வனைக் கொண்டு புகுத்தச்செய்து, நைந்துபோன பீதாம்பரத்தைக் கிழித்துத் தைத்துத் தரச்சொல்லும் மதிகெட்ட வேலைபோல, ஆபாசமான கதைகளை, ஆராய்ச்சியறறவர்கள் நெட்டுருப்போட்டு, அதிலே புதைந்து கிடக்கும் உண்மைகளை உருட்டித் திரட்டி எடுத்து ஒருருவாக்கி, உலகம் உய்யும் பொருட்டு, ஓங்காரச் சொரூபமாக்கப் போகிறார்களாம்!

ஆளத் தெரிகிறதா, மக்களை வாழவைக்க முடிகிறதா, என்று கேள்வி கேட்கப்படுகிறது; இவர்களோ, அதிலே கண்ட தோல்வியை மறைக்க, மணியடித்துக் காட்டுகிறார்கள் மாகாளி கோயில் பூஜாரிபோல! விடுதலை விரர்கள்—இவர்கள் ஆட்சியிலே, பஞ்சம் போகும், பட்டினி ஒழியும், வாழ்வு துலங்கும், வளம் குலுங்கும், பேதம் போகும், பீடைநீங்கும், என்று நம்பி மக்கள், நாடாளும் பொறுப்பைத் தந்தால், இவர்கள் அங்கு அமர்ந்து கொண்டு, தேவாரத் தேனைச் சுவை, திருப்புகழ் அமிர்தம் பருகு, இராமரசம் குடி, வியாசர் விருந்து சாப்பிடு, என்று பேசி, மக்களின் கண்களில் மண்போடுகிறார்கள்!

இப்போது ஏதோ எல்லாத் தேவாலயங்களும் மூடிவிடப்பட்டிருப்பது போலவும், தண்டகாருண்னிய ரிஷிகளின் யாகம் கலைக்கப்பட்டதுபோலவும், இப்போது யாராரோ கிளம்பி, நாட்டிலே நடைபெறும் மத காரியங்களை நாசமாக்கிக்கொண்டு வருவது போலவும், ஒரு 'எத்து' காட்டி, தங்கள் ஆட்சியின் சொத்தைத் தனத்தை மறைக்கப் பார்க்கிறார்கள்.

பாமரமக்களே இப்போது பழங்கால ஏற்பாடுகளில், சடங்குகளில் சம்பிரதாயங்களில் அவநம்பிக்கை அடைந்து விட்டார்கள்! கழனியில் விளைச்சல் இல்லை என்றால், மந்திர நீர் தெளிப்பதில்லை, உரம் தேடுகிறார்கள்; காலரா என்றால், காளியாயிடம் சென்றால் போதும் என்று இருப்பதில்லை, ஊசி போட்டுக் கொள்கிறார்கள். வயல் ஓரத்திலே மின்சாரக் கம்பங்கள்! நீர்ப்பாச

ஒரு விளக்கம்

இந்த நாட்டில் உள்ள பார்ப்பனர், ஆரியரும்—திராவிடரும் கலந்த பிறவியராகும். ஆனாலும், கொள்கையில், நடையில், ஆரியர்களே ஆவார்கள். எதுபோல் என்றால், நம் ஆங்கிலோ-திராவிடர்களைப்போல் அவர்கள் ஆரிய—திராவிடர்கள் ஆவார்கள் எப்படி ஆங்கிலோ-திராவிடர்கள், திராவிடத் தாய் வழியில் வந்தவர்களானாலும், அவர்களது கொள்கை, சமயம், நடைமுறை, ஆங்கிலேயர்களுடையதாய் இருக்கின்றனவோ, அதுபோல், இந்நாட்டுப் பார்ப்பனர்கள் திராவிடத் தாய் வழியில் வந்தவர்களானாலும், அவர்களது கொள்கை, சமயம், நடைமுறை, ஆரியர்களுடையதேயாகும்.

பெரியார்
'பிரசண்ட விகடனில்'

வத்துக்கு மின்சாரம்!! ஏறிச் செல்ல இரயில் வண்டி! பாட்டுக்கு ரேடியோ! பொழுது போக்குக்குச் சினிமா! உலக மறியபத்திரிகைகள்! இவ்வளவும்அவர்களிடம்!! இப்போதுமா அவர்கள் பத்துத்தலை இராவணன்—பாம்பின் தலையில் பூலோகம் — பந்து போல் மலையைத் தூக்கியமாருதி—இப்படிப்பட்ட 'பத்தாம் பசலிகளை' நம்பிக் கொண்டிருப்பார்கள்!

என்னமோ சொல்கிருர்கள்! நமக்கென்ன புரியுது! என்று ஆரம்பமான பேச்சு, நம்பத்தான்முடியவில்லைஎன்ற கட்டத்துக்கு வந்திருக்கிறது! இந்தக் கட்டத்தில் 'கனம்கள்' நுழைந்தால் தான் என்ன, "மேன்மை தங்கிய" நுழைந்தால்தான் என்ன, மாண்டது மீண்டு வரவா போகிறது!! மன்னூர் சாமி கூட நம்பமாட்டானே!

பழைமையை நிலைநிறுத்தும் தந்திரமான வழி, நம்மை நிந்திப்பது, நமது அறிவுப்பிரசாரத்தைநாஸ்திகம் என்று கூறுவது, என்று எண்ணிக்கொண்டு காலட்சேபம் செய்த 'கனம்' அவர்களே, என்ன செய்தார் என்கிறீர்கள், ஒலிபெருக்கி துவக்கவிழா ஆற்றினர்! எதற்கு இந்த ஒலிபெருக்கி? தேவார திருவாசக பாராயணத்தை ஒலிபரப்பவாம்!! வெட்கம் இருக்கவேண்டாமா—தேவார திருவாசக காலத்திலே இல்லாத, நாயன்மார்கள் காலத்திலே தேவைப்படாதஒலிபெருக்கியை, இவர்கள் நாடலாமா? பழைமையைப் பாதுகாக்க, புதுமையிடம் 'வரம்' கேட்கிருர்கள்!!

தேவாரமும் திருவாசகமும் கேட்கும்—அதே போது, தேவார திருவாசக காலத்தில்இல்லாத, அதிசயப்பொருள் விஞ்ஞான வசதி, தேவார திருவாசகம் கேட்டறியாத நாட்டவரால் கண்டு பிடிக்கப்பட்ட செய்தியும் புரியும். அது போதுமே, இவர்களின் அஜீர்ண அகவலின் போலித்தன்மையை அம்பலப்படுத்த.

பழமொழி—புத்துயிர்

காசி க்ஷேத்திரத்தில் பங்குனி மாதம் முழுமையும், பிராம்மணர்கள் முதலாக எல்லோருக்கும் அன்னதானம் செய்ய, திருப்பனந்தாளில் உள்ள தம்பிரான், 5000 ரூபாய் நிதி வைத்திருக்கிருர்—என்றோர் செய்தி இருக்கிறது.

தம்பிரான்கள் என்ன, தலாய்லாமாக்களுங்கூட, இப்போது காலப்போக்குக்கு ஒத்தபடி, சிறிதளவாவது, போக்கையும் நோக்கையும் மாற்றிக்கொண்டு வருகிருர்கள். ஆகவே திருப்பனந்தாளார் செய்யும் திருப்பணி கண்டு, ஆச்சரியப்படுவதற்கில்லை, ஆனல் இதிலே புதைந்துள்ள ஒரு உண்மையைக் கவனிக்கவேண்டுகிருேம்.

காசி க்ஷேத்திரத்தில், **அன்னதானம்!** **அதற்கு, இங்கிருந்து நிதி உதவி!!**

பார்த்தீர்களா, தாராளத்தை!!

இங்கே, பகல் பட்டினி, இராப் பட்டினி இருக்கிருன்—தம்பிரான்களுக்குத் தங்கப் பாதக் குறடுகள் செய்துதந்த தமிழ்மரபினன்!!

தம்பிரான், இவர்களுக்கல்ல, காசி க்ஷேத்திரத்தில், பிராமணர் முதலான எல்லோருக்கும், அன்னதானம் அளிக்க, நிதி அருளுகிருர்.

மகன் காசியில் கோதானம் செய்கிருன், மாதா இங்கே மடிப்பிச்சை எடுக்கிருள்!—என்று பழமொழி கேட்டிருப்பீர்கள். இதோ, திருப்பனந்தாள், அதற்கு உயிர் கொடுக்கிருர்!

வாழ்க இத்தகு வள்ளற்றன்மை!
வளர்க இதை நல்கும் சைவம்!!

பிருந்தையின் சாபம்

[பாவலர்-வேலாயுதசாமி]

கரிய மாயவன் சலந்தர னென்றிடும்
கடுந்திறலோடு சண்டை
புரிய அன்னவன் ஆற்றலுக் கஞ்சியே
புறங்கொடுத் தோடிபபோய்
அரனிடஞ் சொல, அன்னவன் நேர்மைவிட்
டகன்று மற்றவனுவி
பிரிய வீழ்த்தின மிது கடவுளின்
பெருமிதச் செயலாமோ?

மாய்ந்த வீரனின் மனைவியாம் பிருந்தையை
மாலவன் பெருங்காமம்
தோய்ந்த நெஞ்சொடு சலந்திரன் வேடத்திற்
சூதுடன் புணர்ந்தானும்
ஆய்ந்த மங்கை, உன்மனைவியையும் பிறன்
அணைந்திடுவா னென்றே
பாய்ந்து தீயினி லிறந்தனளாம் உடல்
பதறியே மனம்நொந்தே.

பற்றி வாட்டிய காமத்தை நீக்கிலன்
பைத்தியன் விலங்கானுன்,
சொற்ற மோர்ந்திலன் அவளுடற் சாம்பலிற்
கூடியே புரண்டானும்
முற்று நோக்கிய ஈசனங்கொரு செடி
முளைத்திடச் செய்தானும்
உற்ற மாதெனத் துளசியைத் தழுவியே
உளமகிழ் வடைந்தானும்.

(4) அற்றைநாள் முதல் துளபமாலிகை யவன்
அணிந்திட வாயிற்றும்
கற்றைவார் குழற்பிருந்தை பட்டது பிருந்
தாவெனுங் காவனமாம்,
சற்று யோசனை செய்திடுவீர், செழுந்
தமிழகச் சீரியரே
குற்றம் யார்புறம் உள்ளதிக் கதையினிற்
கூறிடுவீர் துணிந்தே.

(5) வெல்லு மாற்றலற் ருேடிய பஞ்சையை
விரியுலகினில் எல்லாம்
வல்ல மாபெருங் கடவுளென் றெவ்விதம்
வழுத்திடலாம் சொல்வீர்?
இல்லையே பிழை சலந்திரன் மீதினில்
எப்படிச் சிவன் வந்து
கொல்லலாம்? பழிதருங் கொடுஞ் செயலிது
கூடுமோ கடவுளுக்கே?

(6) பிறன் மனைவியை விரும்புவதே முதற்
பெரும்பிழை, அவள்மாண்ட
பிறகும் நீங்கிடா வெறியனோர் கடவுளோ?
பெற்றிடும் சாபம்போல்
மறு பிறப்பிலே இராமனின் மனைவியாம்
சீதையின் மாகற்பு
முறியலானது, கடவுளென் றெவரை நாம்
மொழிவது புகல்வீரே.

[பகுத்தறிவு]

★ பொன் வண்டு ★

மலருக்கு மலர் தாவும் சுபாவம் கொண்டதுதானே வண்டு! மது கிடைக்கவேண்டும் என்பதற்காக, மலருக்கு மலர் தாவும்! சபல புத்தி படைத்த ஆடவனை இதனாலேயே மலருக்கு மலர் தாவும் வண்டுக்கு ஒப்பிடுகிறார்கள்.

எங்கும் வண்டுகளுக்கு இந்தச் சுபாவம் உண்டு, ஆனால் கோசல நாட்டு வண்டு அப்படியல்லவாம்!

'ஐயன் அவதரித்தானே' அந்தக் கோசலநாட்டு வண்டுகளைப்பற்றி, நம்மோடு இப்போது வாழ்ந்துவரும் கிருபானந்தவாரியார் பேசி இருக்கிறார்—கவிதை படைத்த காரணத்தால்.

கோசலநாட்டு வண்டுகள், மலருக்கு மலர் தாவுவதில்லையாம்—ஒரே மலரில் தேன்மொண்டு உண்டு மகிழுமாம்!

அதாவது, கோசலநாட்டு வண்டுகளே, மதுதேடி, மலருக்கு மலர் தாவுவதில்லை, என்றால் அந்நாட்டு ஆடவர் பற்றிக் கூறவாவேண்டும். அவ்வளவு ஒழுக்க மேம்பாடு இருந்தது என்கிறாராம்.

அத்துடன் விட்டாரில்லை! மலருக்கு மலர் தாவவேண்டிய அவசியம் வண்டுக்கு ஏற்படவில்லை; காரணம் அதற்குத் தேவையான 'மது' அவ்வளவும், ஒரே மலரிலேயே கிடைத்தது, நாடு அவ்வளவு செழிப்பாக இருந்தது, என்கிறாராம்.

பரவாயில்லை, வண்டுகள் மலர்களிலே குடைந்து, மது எடுப்பதைவிடத் திறமையாக வாரியார் வேலை செய்கிறார், என்று பாராட்டலாம், அவர் அத்தோடு விட்டிருந்தால்! விடுவாரா! ஆச்சாரியார் அருகில் அமர்ந்திருக்கிறார், எனவே வில்வீரன் பக்கம் நின்ற வானர வீரன், கடலையும் தாண்டும் வல்லமை பெற்றதுபோல, நம்மை எல்லாம் இழுத்துப்போட்டு ஏசவும் துணிந்தார்.

கோசலநாட்டு வண்டுகள் இப்படி இருந்தன!

கவிதை இதை அழகாக எடுத்துக் காட்டுகிறது.

மலர் ஒன்றிலேயே தேவையான மது கிடைத்ததாம்!

இதை இந்தக் கருவண்டுகள் உணரக் காணோம்!—என்று ரசிகர்களின் ஆஹாஹாரத்துக்கிடையே கூறினாராம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வாரியார், இதுபோலத்தான் வாய்ப்பறை அறைந்தார்—அதன் பலனையும் கண்டார்.

பெரியார் எனும் ஒரு நச்சு ஆறு ஓடுகிறது, தமிழகத்தில், என்று பேசினார் — 'திராவிடநாடு' அதற்குக் கண்டனம் தீட்டிற்று, வாரியார் நண்பர் ஒருவர்மூலம், விளக்கமும் வருத்தமும் தெரிவித்தார். அதற்குப் பிறகு, வகையாக வாழவழி அமைத்துக்கொண்ட வாரியார், அவர் 'பாணியில்' பேசிவந்தார்—நாமும் நடக்கட்டும் அவருடைய நாவாணிபம் என்று இருந்து வந்தோம். இப்போது, அவர்பார்க்கிறார், பல்லிழந்த பாகவதர்களும், பதம் இழந்த பண்டாரங்களும், விரட்டப்பட்ட தலைவர்களும், கூடிக்கொண்டு ஒரு 'வியூகம்' அமைக்கிறார்கள், இனி நமக்குப் பயமென்ன, நாமும் ஜல்லடம்கட்டிக்கொண்டு, 'ஜாலரா'வையே போர்க்கருவியாக்கிக்கொள்வோம், என்று துணிந்துவிட்டார் போலிருக்கிறது. அதனால்தான், கோசலநாட்டு வண்டுகளைப்பற்றிப் பேசவந்தவர், 'கருவண்டுகளை'ப்பற்றியும் குத்தலாகக் கூறினார்.

மலர்களிலே உள்ள மதுவை உண்டு மகிழும் வண்டுகளைப்பற்றிய சீரிய ஆராய்ச்சி, இந்தச் சிவநேசச் செல்வருக்கு இருக்கட்டும், ஆலகால முண்டவன் அருளால், வளரட்டும், ஆனால், பாவம், அவர் தமக்கிருக்கும் மெத்தச் சங்கடமான வேலைகளுக்கிடையில், குடைந்தெடுத்தால் போதுமான அளவு மதுதரவல்ல மலர்களை, 'கருவண்டுகளுக்கு'ச் சிபாரிசு செய்யும் 'சேவை'யையும் மேற்கொள்ள வேண்டாமே!!

'கருவண்டுகள்' நன்றாக அறிந்துதான் உள்ளன, மலர், மது, குடையும்போது ஏற்படும் களிப்பு; களிப்பு உண்டாக்கும் கானம், அதிலே பிறக்கும் கவிதை—எல்லாம்!! வாரியார், கோசலநாட்டு வண்டு, மிதிலை மலர்கள், கிஷ்கிந்தைக் கிளர்ச்சி, இப்படித் தமது ஆராய்ச்சிகளை நடத்திச்செல்லட்டும், வீணாகக் கருவண்டுகளிடம் வருதல் வேண்டாம்!

கருவண்டுகள் — கொட்டும்!! கடும் விஷமாம், கருவண்டுகள் கொட்டினால்!! — என்று மிரட்டுகிறோம், என்று எண்ணாதீர்கள். திருநீலகண்டர்மீது பாரத்தைப் போட்டுவிட்டுச் சைவத்தைப் பரப்பும் சிலர், கருவண்டு கொட்டுமே, என்று அஞ்சுவார்! நாமார்க்கும்குடி அல்லோம், என்பார்!!

'கருவண்டுகள்' என்று கேலி பேசினால் இவர் போன்றோரை, பொன்வண்டுகள் என்று திருப்பிக் கேலிகூற எவ்வளவு நேரம் பிடிக்கும்!!

விளையாட்டுச் சிறுவர்களிடம் சிக்கிய பொன்வண்டுபோல, வாரியாரின் கவிதா நடை, வசீகரப் பேச்சு, ஆகிவிட்டது.

இதுகூட, அவரிடம் உள்ள மதிப்பும் அன்பும் அறவே அற்றுப் போகாத நிலையிலே, கூறுவது —பொன்வண்டு—என்று.

பலர், 'கருவண்டுகள்' என்று அவர் நம்மை ஏசினால், நமக்கு அவரை ஏசத்தெரியாதா, அதே 'பாஷையில்'. ஊர்க் கோடியில், மலத்தை உருட்டிக்கொண்டுகிடக்கும் 'வண்டு'போல, இவர், பழங்கால ஆபாசச் சரக்கைக் குடைந்து முகர்ந்து, உண்டு, உவகை பெறுகிறாரே, ஐயகோ! என்னே இவருக்கு வந்துற்ற கதி! ஏனோ இச் சிறுமதி! இதைச்செய்தோ சேர்க்க வேண்டும் பெருநிதி! — என்றெல்லாம் கூறுவர். ஏன், வாரியார், வம்பை விலைக்கு வாங்கவேண்டும்! கோசலத்தோடு நிற்கட்டும், கிஷ்கிந்தையை ரசிக்கட்டும், நம்மோடு அவசியமற்று மோதிக்கொள்ள வருவானேன்! ஆப்பை அசைப்பானேன்.........!!

★

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.